HONDA ... PERIODICALS DIVISION LIBRARY 1980-2-17

ஹொண்டா
HONDA
C. D. 125
விற்பனைக்கு மற்றும் விபரங்கட்கு
தொடர்பு கொள்ளவும்
நாபன்ஸ்
டிரேட்ஸ்
சேகரம் கட்டிடம்,
74, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 693.

பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 | யாழ்ப்பாணம் | தை 28 | ரபி-அவ் 23 | திங்கட்கிழமை | இதழ் 1 | 11-2-80

# கிளிநொச்சிக்கு அப்பாலே

# முப்படை ரோந்து



## டி. ஐ. ஜி. 'சுந்தர்' தகவல்

(யாழ்ப்பாணம்)

**வழிப்பறி, கொள்ளை போன்ற வன்முறைக்குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக பிரதேச ரீதியில் தங்காலை மற்றும் சில இடங்களில் மேற்கொள்ளப்பட்ட முப்படைகளினதும் பொலிசாரினதும் ரோந்து நடவடிக்கைகள் வெற்றியளித்திருப்பதால் இதரபகுதிகளுக்கும் படிப்படியாக வி ப்படவிருக்கிறது.**

இத்திட்டத்தை உருவாக்கிய குற்றப்புலனாய்வுத் துறைப் பொறுப்பதிகாரியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கமே இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

திரு. சுந்தரலிங்கம் இன்று கிளிநொச்சியில் நடைபெறும் முக்கிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட மகாநாடொன்றில் கலந்துகொள்கிறார்.

வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலும் வவுனியா மாவட்டத்தில் கிளிநொச்சிக்கு அப்பால் வவுனியா, மன்னார், திருமலை, ஹொரவப்பொத்தானை பாதைவழிகளிலும்மற்றும் இப்பகுதிகளிலுள்ள ரயில் பிரயாணிகள் மற்றும் பொது மக்களுக்கும் பாதுகாப்பளிப்பது சம்பந்தமாக கூட்டுரோந்து நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக இன்று கிளிநொச்சியில் நடைபெறும் மகாநாட்டில் ரயில்வே அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சர் திரு. [illegible], வடபகுதி [illegible] ஆகியோர் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

# "வீடியோ' காட்டுவோர்மீது நடவடிக்கை எடுப்போம்!"

## யாழ். பொலிஸ் அதிபர் தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்) ''வீடியோ' டி. வி. படக்காட்சி நடதுபவர் மீது பொலிசார் நடவடிக்கை எடுத்துவந்துள்ளனர். இனிமேலும் தொடர்ந்துநடவடிக்கை எடுப்பார்கள். வீடியோ காட்டுவது சட்டவிரோதமான செயலாகும்''

யாழ். மாநகரசபை கமிட்டி அறையில் நடந்த 'வீடியோ' டி. வி. படக்காட்சித் தடைக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கையில் பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நகரமுதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் தலைமையில் நடந்த இக் கலந்

(8ம் பக்கம் பார்க்க)

ஹிஜ்ரி விழாவை கொண்டாடும் முகமாக
மாபெரும் இன்னிசைக் கச்சேரி

அரு இசைமுரசு
**நாகூர் E. M. ஹனிபாவும்**
வாத்தியக் கோஷ்டியினரும் கலந்து
கொள்கிறார்கள்.

காலம்: 17-2-80 ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஜின்னா மைதானம்
நேரம்: இரவு 7-30 மணி

**அனைவரும் திரண்டு வருக!**

4938

# நண்பனை நடித்த பலே ஆசாமி!

(யாழ்ப்பாணம்)

சென்னையிலுள்ள ஒரு ஹோட்டலில் இரு நண்பர்களுக்கிடையே ஆரம்பமான 'கதை' அவர்கள் இலங்கை திரும்பியதும் 'தொடர்கதை யாக வளர்ந்து, நெருக்கமான உறவாக மலர்ந்து, இறுதியில் 'அறுபதினாயிரம் ரூபா, திருட்டு நாவலாக முற்றுப் பெற்றுள்ளது!

இச் சுவையான உறவுச் சம்பவம்பற்றி தெரிவிக்கப்பட்டதாவது;

''குரும்பசிட்டியைச் சேர்ந்த

(8-ம் பக்கம் பார்க்க)

# 22

இருபத்திரண்டு வயதென்றால் வாலிப மிடுக்குடன் பீடுநடைபோடும்காலம்.

இன்றுஉங்கள் அபிமான ''ஈழநாடு'' தனது இருபத்தோராவது வயதைக் கடந்து இருபத்திரண்டாவது வயதில் ஏறுநடை போடுவது பற்றி நிச்சயம் நீங்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைவீர்கள்.

இருபத்தொருவயதைத்தாண்டி இருபத்திரண்டாவதுவயதில் காலடி எடுத்து வைத்தாலும் குழந்தைப் பருவத்தில் 'ஈழநாடு' அனுபவித்த தொல்லைகளும் துன்பங்களும் இன்னும்நீங்கவில்லையென்பதை கவலையுடன் தெரிவித்துக் கொள்ளவேண்டியிருக்கின்றது.

சகல வசதிகளும் படைத்ததலைநகராம் கொழும்பு நகரிலிருந்துதான் சகலதினசரிப் பத்திரிகைகளும் வெளிவருகின்றன.

இந்த வசதிகளில் ஆயிரத்தில் ஒருமடங்குதானும் இல்லாமல் தலைநகருக்கு வெளியில் அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரேயொரு தமிழ்த் தினசரி 'ஈழநாடு' கடந்த இருபத்தியோராண்டு காலமாகத் தமிழ்பேசும் மக்களுக்கும் நாட்டுக்கும் தன்னாலியன்ற நற்பணியைச் செய்து வருகிறதென்றால் அதற்கு இறையருளும் வாசக அன்பர்கள், வர்த்தகர்கள், விற்பனையாளர்கள் ஆகிய அனைவரின் ஆதரவும் ஒத்துழைப்புமே காரணமென்பதை நாம் நன்றியுடன் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்

தொடர்ந்தும் உங்களுடைய 'ஈழநாடு' உங்களுக்குத் தன்னாலியன்ற நற்பணியை செய்வதற்குக் காத்திருக்கின்றதென்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறோம்

**உங்கள் தேவைகள் எதுவாயினும் அத்தனையும் நியாயவிலையில் கிடைக்கிறது எம்மிடம்!**

விவசாயிகளின் தேவைகளுக்கு:
- நீரிறைக்கும் இயந்திரம் ● இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள்
- தெளிகருவிகள் ● உப உறுப்புக்கள் ● அல்கத்தீன் குழாய்கள்
- கிருமிநாசினிகள் மற்றும் விவசாய உபகரணங்கள்.
- மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பயிர்ச் செய்கைகளுக்கான உரக்கலவைகள்

உபஉணவுப் பொருட்கள்:
- பூடு ● பயறு ● மிளகு ● கிலம் (KLIM) பாலுணவு
- நெஸ்டம் (NESTUM) ● ஓவல்ரின் (OVALTINE)

''வெல்பாக்'' சாடின் டின்மீன்.

பாவனைப் பொருட்கள்: ''கோல்மன்'' பெற்றோமாக்ஸ்

கால்நடைகளுக்கு: ● உணவுத்தீன் வகைகள் ● சகல மருந்து வகைகள்.

விரைவில் கிடைக்கவிருக்கிறது ''ரெக்சின்ட்'' தைவான் பைசிக்கிள்கள். விலை ரூபா 750– மட்டுமே. கரியர், ஸ்ராண்ட், பெல், முன்லைட் இனாம்.

வர்த்தக விசாரணைகள்:

கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகைகள் உண்டு!

**ஸ்ரீலங்கா கூட்டுறவு சந்தைப்படுத்தும் சம்மேளனம். (ம. ப.)**
**Sri Lanka Co-op. Marketing Federation Ltd.,**

தலைமைக் காரியாலயம்: ''கூட்டுறவுச் சதுக்கம்'', 127, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு-14.

கிளை: 110, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (தொலைபேசி: 504)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

சோடாப் பெட்டிகள் ஏற்றி, இறக்க கூலியாட்களும், சோடாப் பெட்டிகள் ஏற்றி, இறக்கி வியாபாரம் செய்யக் கூடிய சேல்ஸ்மென்னும் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். உரிமையாளர்: பிள்ளையார் ஸ்ரோர்ஸ், 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 4922

தனியார் வைத்தியசாலையில் உதவியாளர் ஆக கடமையாற்றுவதற்கு பெண் தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. முடிவு திகதி 18-2-80 விளம்பர இல: 4934 'ஈழநாடு' லிமிட். யாழ்ப்பாணம். 4934

குறைந்தது 5 ஆண்டுகளாவது பிடவை வியாபாரத்தில் அனுபவம் மிக்க ஆண் விற்பனையாளர்கள் (Salesmen) உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். நேரில்சமுகம் அளிக்கவும். கே. நாகமுத்து & சன், 48-50, பெரியகடை, யாழ்ப்பாணம். 4935

### விற்பனைக்கு

ஒறிஜினல் திண்டுக்கல் இரும்புப்பெட்டி நேரில் பார்வையிடவும். விலாசம்: (F) பான்ஸி ஜுவலஸ், இல: 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பணம். 4912

அரிவு மேசை பட்டடை, பொழி துளைக்கும் பட்டடை, பெற்றர் என்ஜின் 5 H. P. பெட்போட் என்ஜின் 6 H. P. விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. இராசன் கடைச்சல் தொழிற்சாலை. பிரதானவீதி, சுன்னாகம். 4920

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பேராசிரியர் வானமாமலை நினைவாஞ்சலி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் காலஞ்சென்ற தமிழியல் ஆய்வாளர் பேராசிரியர் நா. வானமாமலையின் பணிகளை நினைவுகூர்ந்து 13-ம் திகதி புதன்கிழமை பி. ப. 4 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைக்கருத்தரங்கு அறையில் தமிழ்த்துறையின் ஆதரவில் நினைவு அஞ்சலிக்கூட்டம் ஒன்று நடைபெறும்.

துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இரங்கலுரை நிகழ்த்துவார்.

காலஞ்சென்ற பேராசிரியரின் ஆய்வுப்பணிகளின் நோக்கு நிலை நின்று பேராசிரியர் கா. சிவத்தம்பி "சமூக வரலாற்றியல் ஆய்வுகள்" என்ற பொருளிலும், பேராசிரியர் க. கைலாசபதி "இலக்கியத் திறனாய்வு" என்னும் பொருளிலும் கலாநிதி அ. சண்முகதாஸ் 'நாட்டுப்பண்பாட்டியல்' என்னும் பொருளிலும் பேசுவார்கள்.

'பேராசிரியர் வானமாமலைக்கு தமிழியல் மாணவர்களின் கடப்பாடு' என்ற விடயம் பற்றி திரு. சி. சிவலிங்கராசா பேசுவார்.

(நா)

......

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மக்கள் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: வ. பாலச்சந்திரன், உப தலைவர்: க. வேலாயுதபிள்ளை, பொதுச் செயலாளர்: எம். எஸ். கே. மூர்த்தி, பொருளாளர்: ஐ. தர்மரெட்ணம், கணக்குப் பரிசோதகர்: க. ஜெகதீஸ்வரன், நாடகச் செயலாளர்: க. கணேசலிங்கம், வங்கிக் கணக்காளர்: தி. சிறீஸ்கந்தராஜா, விளையாட்டுச் செயலாளர்: ந. அமிர்தலிங்கம், காப்பாளர்கள்: சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம், யாழ். மாநகர சபை ஆணையாளர் க. சிவஞானம், து. ரவீந்திரன்.

[நா-கு]

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்.
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை

அறிவித்தல்

வீடு கட்டும் இடத்தில் சீமெந்து விநியோகம் செய்தல்
(HOME DELIVERY SERVICE)

1980 - 02 - 14 ம் திகதி தொடக்கம் சீமெந்துக் கூட்டுத்தாபன தேவைப்பாடுகளை அதாவது அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபரின் சிபார்சு ஆகியவற்றைத் திருப்திப்படுத்தும் வீடுகட்டும் வாடிக்கைக்காரர்களுக்கு கட்டிட வேலை நடைபெறும் இடத்திலேயே 25 அல்லது 50 பக்கற்றுக்கள் போட்லன்ட் சீமெந்தை விநியோகம் செய்வதற்கு காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை பொறுப்பேற்கும். மேலும் விபரங்கள் தேவையாயின் தயவுசெய்து தொடர்புகொள்க. (இந்த நடைமுறை யாழ் குடா நாட்டிற்க மட்டுமே பொருந்தும்.) (Jaffna Peninsula only)

லாசம்:

வீடுகட்டும் இடத்தில்
சீமெந்து விநியோக சேவைப்பகுதி
(Home Delivery Service)
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை.
காங்கேசன்துறை.

ஒப்பம்
தொழிற்சாலை முகாமையாளர்

4926

" 'வீடியோ' படக்காட்சியை ஒழித்துக்கட்ட

# புதிய தமிழ்ப் படங்கள் திரையிடப்படவேண்டும்"

## 'வீடியோ தடை' கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்தில் போதியளவு புதிய தமிழ்ப்படங்கள் திரையிடப்படாத நிலையிலேயே 'வீடியோ' படக்காட்சி சந்திக்குச் சந்தி காட்டப்பட்டு வருகிறது. பல புதிய தமிழ்ப்படங்களைத் திரையிட்டால் மக்கள் 'வீடியோ' படக்காட்சிக்குச் செல்லமாட்டார்கள். இப்பிரச்னையைத்தீர்க்க ஒரேவழி புதிய படங்களை இறக்குமதி செய்து காட்டுவதுதான்"

யாழ். மாநகரசபைக் கமிட்டி அறையில் நடந்த 'வீடியோ' படக்காட்சியைத் தடை செய்வது பற்றி நடந்த கலந்துரையாடலில் நீகல், வினசர் தியேட்டர்களின் பொது முகாமையாளர் திரு. சிறில் சுவாம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் நடந்த இம்மாநாட்டில் ஆணையாளர் திரு. கே. சிவஞானம், யாழ். பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா, தலைமைக்காரியாலய இன்ஸ்மெக்டர் திரு. சந்திரா பெரேரா. யாழ். நகர தியேட்டர்களின் பிரதிநிதிகள், முஸ்லிம் வட்டாரப் பிரமுகர்கள், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

'வீடியோ' படக்காட்சிக்கான விளம்பரங்கள், ஒலிபெருக்கிமூலம் வீதிகளில் விளம்பரப்படுத்தப்படுவதாகவும் இதற்கு பொலிசார் அனுமதி வழங்கியிருப்பதாகவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

### பொலிஸ்காரர் பார்த்தார்

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் நடந்த 'வீடியோ' படக்காட்சியை அங்குவந்த பொலிஸ் உத்தியோகத்தர் பார்த்துக் கொண்டிருந்ததாகவும், பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு கமிட்டி உறுப்பினர் அங்கு இப்படக்காட்சியை ஏற்பாடுசெய்ததாகவும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

### பொலிஸ்குழு வேண்டும்

திரு. சுவாம்பிள்ளை மேலும் பேசுகையில் பொதுமக்கள் ஒத்துழைப்பின்றி 'வீடியோ' படக்காட்சியை நிறுத்தமுடியாதென்றும், ரோந்துசுற்றும் பொலிசாரினால் நடவடிக்கை எடுக்கமுடியாதென்றும் இதற்கென பொலிஸ் குழு ஒன்று இயங்கவேண்டுமென்றும் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: "ஜெனரல் சக்கரவர்த்தி வீடியோ படக்காட்சி மூலம் யாழ் மாவட்டமெங்கும் காட்டப்பட்டபின்னரே அப்படம் யாழ். நகரில் திரையிடப்பட்டது. வழக்கமாக ஜனசமுத்திரம் அலைமோதும் சிவாஜியின் இந்தப்படம் எதிர்பார்த்த மக்கள் திரளைப் பெறவில்லை. வீடியோ மூலம் மக்கள் பார்த்துவிட்டதால் தியேட்டர்ப்பக்கம் அவர்கள்செல்லவில்லை.

### தணிக்கை செய்யப்படாத...

தணிக்கை செய்யப்படாத புதிய தமிழ்ப்படங்கள் காட்டப்படுவதால் இளைஞர்கள் அதனைப் பார்த்துக் கெட்டுப் போகிறார்கள். கலவரம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. சுகாதாரவசதிகள் கிடையாது, ஒரு சிறியஅறையிலிருந்து 100 பேர் மிக நெருக்கமாக அமர்ந்து பார்க்கிறார்கள். புதிய தமிழ்ப் படங்கள் இறக்குமதி செய்யப்படவேண்டும், அதுவரை சட்டவிரோதமான வீடியோ படக்காட்சியை எப்படியும் தடுத்து நிறுத்திவிட முடியாது. பொலிசார் கூடிய அக்கறையெடுத்து இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

### தியேட்டர் ஊழியர் பாதிப்பு

ராணி தியேட்டர் முகாமையாளர் திரு. நித்தியானந்தன் பேசுகையில் கூறியதாவது;

பலலட்சம் ரூபாவைச் செலவிட்டு தியேட்டர்களைக் கட்டி ஒவ்வொரு தியேட்டர்களிலும் சுமார் 30 பேர் வரை வேலை வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமங்களிலும், வீடுகளிலும் வீடியோ படக்காட்சி காண்பிக்கப்படுவதால் பொதுமக்கள் தியேட்டர்களில் படம்பார்ப்பதை குறைத்துவிட்டனர். அதனால் உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கிடைக்கக்கூடிய தமாஷா வரி கூடக் கிடைக்காமல் போகின்றது.

புதிய தமிழ் படங்கள் வீடியோப் படக்காட்சி மூலம் காண்பிக்கின்றபடியால் கிராம மக்கள் வீடியோ படக்காட்சிக்கே செல்லுகின்றார்கள் அதனால் தியேட்டர்களின் வருமானம் பாதிக்கப்படுவதுடன் தியேட்டர்களில் வேலைசெய்யும் ஊழியர்களும் அவர்களின் குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றன.

### தமிழ்ப்படங்கள் திரையிடவேண்டும்

தியேட்டர்களில் படம்காண்பிப்பதற்குமுன் அப்படங்கள் 'வீடியோ படக்காட்சி மூலம் காட்டப்படுவதால்த்தான் மக்கள் அப்படங்களைப்பார்க்கிறார்கள். ஆனபடியால் திரைப்படக்கூட்டுத்தாபனம் புதிய தமிழ் படங்களை இறக்குமதி செய்து தியேட்டர்களுக்கு வழங்கவேண்டும். வீடியோ படக்காட்சிக்கு எமது பிள்ளைகள் கூடச்செல்லுகின்றனர். அதைத்தடுக்க எம்மால்முடியாமல் இருக்கிறது.

தணிக்கை செய்யப்படாத படம் காட்டப்படுவதால் இளைஞர்கள் கெட்டுப்போகிறார்கள்.

சங்கானைப் பகுதியில் தினமும் வீடியோ படக்காட்சி காட்டப்படுகிறது. சங்கானைப் பொலிசார் படங்காட்டியவர்களின் உபகரணங்களைப் பறிமுதல் செய்ததுடன் படம்காட்டியவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தனர். ஆனால் படம்காட்டும் சாதனங்கள் உரியவரிடம் திருப்பிஒப்படைக்கப்பட்டது.

சங்கானையில் வீடியோ படக்காட்சி நடைபெற்றபோது கத்திக்குத்துக்களும் இடம்பெற்றன.

### கோவிலிலும் காட்டப்படுகிறது

கோவில்களுக்கும் சன சமூக நிலையங்களுக்கும் நிதி சேர்ப்பது என்ற போர்வையில் வீடியோ படக்காட்சி காண்பிக்கப்படுகிறது. ஆனால் ஒரு முறை கோவிலுக்குப் பக்கத்தில் படக்காட்சி காட்டப்பட்டபோது அக்கோவில் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டிருந்தது.

தினமும் இரவு 11 மணிக்குப்பின்பும் படக்காட்சிகள் காட்டப்படுவதால் பாடசாலைப்பிள்ளைகளின் படிப்பும் பாதிக்கப்படுகிறது. சில இடங்களில் பல படக்காட்சிகள் ஒரே இரவில் போட்டிபோட்டுக் காண்பிக்கப்படுகிறது. இதனால் பல இடங்களில் சண்டை சச்சரவுகளும் இடம்பெற்றுள்ளன.

(கொ)

......

வடபிராந்திய

## போக்குவரத்துச்சபை ஊழியர்-பதவிஉயர்வும் இடமாற்றமும்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம், வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடமையாற்றிய ஊழியர்களில் பதவி உயர்வு பெற்றோர் விபரம்:

யாழ்சாலை பொறியியல் துறையைச் சேர்ந்த திரு. து. ஸ்ரீகிருஷ்ணராசா உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்று வவுனியா கணக்காய்வு அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்சாலையைச் சேர்ந்த காப்பாளர் திரு. பி. மே. மேர்சிலின் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்று யாழ். கணக்காய்வு அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ் சாலையைச் சேர்ந்த கணக்காளர் திரு. சி. சிட்ணேஸ்வரன் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தராகப் பதவிஉயர்வு பெற்று வவுனியா கணக்காய்வு அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

காரைநகர் சாலையைச் சேர்ந்த காப்பாளர் திரு. என். பேரம்பலம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்று வவனியா கணக்காய்வு அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

கிளிநொச்சி சாலையைச் சேர்ந்த காப்பாளர் திரு. வி. கே. கனகரத்தினம் கணக்குலிகிதராகப் பதவி உயர்வு பெற்று வவனியா கணக்காளர் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(ச)

......

### யாருடையது?

கொழும்பு-யாழ் பகல் கடுகதி ரயிலில் (7-2-80) மல்லாகத்தைச் சேர்ந்த கே.மாணிக்கவாசகர் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட உடுப்புப்பார்சல் ஒன்று ஆஸ்பத்திரி தஸ்தாவேஜு ஒன்றுடன் 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

விற்பனைக்கு

5 ஸ்ரீ 404 புதிய என்ஜின், கம்பனி சொந்தப் பாவிப்பிலுள்ளது!
பார்வையிடுதலுக்கும் - விலை விபரங்களுக்கும்
தொடர்பு கொள்க:-
விற்பனை முகாமையாளர்,

தபின்னன்ஸ் கம்பனி லிமிட்,

249, மின்சாரநிலைய வீதி, (தொலைபேசி: 7680) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தனது உள்ளத்தூய்மையை நிலைநாட்டுவதற்கு விரும்புமெவனும் தனது உடைமையெல்லாவற்றையும் இழப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும்.

--மகாத்மா காந்தி

## மக்கள் கருத்து

### அமரர் ஜி. ஜி. நினைவுக் கட்டுரை

அமரர் ஜி. ஜியின் நினைவு தினத்தையொட்டி 8-2-80, 9-2-80 ஆகிய இரு தினங்களிலும் நினைவுதினக் கட்டுரைகள் வெளியிட்டிருந்தீர்கள்.

தனது வாழ்நாள் முழுவதும் தமிழினத்தின் நல்வாழ்விற்காகவே உழைத்த அமரர் ஜி. ஜியை நினைவுபடுத்திக் கட்டுரைகள் வெளியிடுவது வரவேற்கத்தக்கதே.

எனினும் 'ஈழநாடு' வாசகன் என்ற முறையில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அமரர் ஜி. ஜி. 1976, மே மாதம் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் மாநாட்டில் கூட்டுத் தலைவர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டது தொடக்கம் அவரை எந்த ஒரு தமிழ் மகனும் காங்கிரஸ்வாதியாக நோக்கவில்லை. அதே போன்றே அமரர் தந்தை செல்வாவையும் எந்த ஒரு தமிழ் மகனும் தமிழரசுவாதியாக நொக்கவில்லை. இருவரையும் தமிழ் மக்கள் தங்கள் விடுதலைக்காக உழைக்கும் தலைவர்களாகவே கருதினார்கள்.

எனவே அமரர் ஜி. ஜியின் நினைவுதினத்தில் அவரை காங்கிரஸ்வாதியாக ஒரு குறுகிய வட்டத்துக்குள்மட்டும் உட்படுத்தி எழுதப்பட்ட கட்டுரையை 9-1-80 இதழில் வெளியிட்டதின்மூலம் அமரர் ஜி. ஜியை களங்கப்படுத்தி விட்டீர்கள்.

அமரர் ஜி. ஜியை ஞாபகப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு தமிழ் மக்களின் தற்போதைய ஒரு மனதான தலைமையையும் இயக்கத்தையும் தாக்குவதற்கே நீங்கள் வெளியிட்ட கட்டுரை பயன்பட்டுள்ளது.

எனவே இனிமேல் இவ்வாறான கட்டுரைகளைப் பிரசுரிக்காமலிருப்பதே 'ஈழநாடு' அமரர் ஜி.ஜிக்குச் செய்யும் அஞ்சலியாகும். 'ஈழநாடு' வாசகனென்ற முறையில் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இக்கடிதத்தை 'ஈழநாடு' இதழில் வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

'ஈழநாடு' வாசகன்

**கு. குமாரதேவன்**

கோவளம்,
காரைநகர்.

## விசுவமடுவில் புதிய பாடசாலை

(புளியங்குளம்)

விசுவமடுக் குடியேற்றத் திட்ட மக்களின் நீண்டகால வேண்டுகோளுக்கிணங்க இப்பகுதியில் புதிய பாடசாலையை அமைக்கக் கல்வியமைச்சு அங்கீகாரமளித்துள்ளது. இப் பாடசாலைக்கு எண்பது அடி நீளமும் இருபது அடி அகலமுமான கட்டிடத்தை அமைப்பதற்கு முல்லைத்தீவுப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சே. மா. செல்லத்தம்பு பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் 48,000 ரூபாவை ஒதுக்கியுள்ளார். இவ்வேலைகள் வவுனியா கல்விப்பணிமனையின் கட்டிடப் பகுதி அதிகாரி திரு. எஸ். பாலச்சந்திரனின் மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றது. (அ)

அமரர் ஜி. ஜி. நினைவுதினம்:

# "கூட்டணியினர் வெகுவிரைவில் மந்திரிப்பதவி ஏற்பார்கள்"

## காங்கிரஸ் துணைத்தலைவர் உரை

(யாழ்ப்பாணம்)

"1957ம் ஆண்டு இனக் கலவரத்தின் பின்புதான் தமிழரசுக்கட்சியினர், 1965ம் ஆண்டு யூ. என். பி. அரசுடன் சேர்ந்து மந்திரிப் பதவியேற்றனர். 1977ம் ஆண்டு இனக் கலவரம் நடந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் வெகு விரைவில் யூ. என். பி. அரசில் சேர்ந்து மந்திரிப் பதவியேற்க இருக்கின்றனர்."

யாழ். நகரமண்டபத்தில் நடந்த அமரர் ஜி. ஜி பொன்னம்பலத்தின் மூன்றாவது நினைவுதினக் கூட்டத்தில் பேசிய தமிழ்க் காங்கிரஸ் கொழும்புக் கிளைத் துணைத் தலைவர் சட்டத்தரணி எம். மோதிலால் நேரு மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்க் காங்கிரஸ் உப-தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. மோதிலால் நேரு மேலும் கூறியதாவது:

"மந்திரிப் பதவி எடுக்க நினைத்திருந்தால் தேர்தல் முடிந்தவுடன் 1977ம் ஆண்டு, ஜனாதிபதி அரசில் சேருமாறு கேட்டவுடன் எடுத்திருப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அண்மையில் கூறியிருந்தார். அன்றைய நிலையில் அவர்கள் மந்திரிப் பதவி எடுத்திருக்கமுடியாது. அவர்களின் வெற்றிக்காக உழைத்த இளைஞர்கள் விட்டிருக்கமாட்டார்கள். இளைஞர்களுக்குப் பயந்துதான் அன்று அரசில் சேரவில்லை. ஆனால் இன்று நிலைமை வேறு, இளைஞர்கள் பலர் வெளியில் சென்றுவிட்டனர். சிலர் அரசின் கெடுபிடிக்குப் பலியாகி விட்டனர். கடந்த 3 வருடகாலமாக இளைஞர்களுக்குப் பயந்துதான் பலர் கூட்டணியில் ஒட்டிக்கொண்டிருந்தனர் இவர்கள் இன்று ஒவ்வொருவராக வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்-

### தமிழ் ஈழத்தில் மேதின விழா

அடுத்த மேதின விழா, தமிழ் ஈழத்தில்தான் நடைபெறுமெனக் கடந்த மேதின விழாவில் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அமிர்தலிங்கம் முற்றவெளியில் கூறினார். இன்னும் மேதின விழாவிற்கு 3 மாதம் இருக்கிறது. எங்கே நடக்கப்போகிறது, தமிழ் ஈழத்திலா? அல்லது காலிமுகத் திடலிலா?

### அறிக்கையை எதிர்பார்த்து

இன்று கூட்டணியினர் மாவட்டசபை அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கமிட்டியில் திரு. நீலன் திருச்செல்வம் கூட்டணி சார்பில் இருக்கின்ருர். அறிக்கை கிடைத்ததும் தமிழ் ஈழத்திற்கு முதற்படி என்று கூறி, மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றப்போகிருர்கள். தேர்தல் காலத்தில் தமிழ் ஈழத்திலிருந்து ஓரங்குலமும் பின்வாங்கமாட்டோம்; குறைந்த எதையும் ஏற்கமாட்டோம் எனக் கூறினர்கள்.

### மூன்று மாதத்தில் தமிழ் ஈழம்

"மூன்று மாதத்தில் தமிழ் ஈழம் அமைப்போம் என்றதால் தமிழ்மக்கள் நம்பி வாக்களித்தனர். இன்று எதைக் கொண்டுவந்தனர். புலித் தடைச் சட்டம்; பயங்கரவாதச் சட்டம்; யாழ்ப்பாணத்தில் அவசரகால நிலைமை; இராணுவத் [illegible] பிடியைக் கொண்டுவந்தார்கள். இவற்றைக் [illegible] வரக் காரணமாக இருந்த யூ. என். பி. அரசின் மந்திரிக்குக் கூட்டணியினர் யாழ்ப்பாணத்தில் விருந்துவைத்தனர்; வரவேற்றனர்.

### அறிக்கை விடாததேன்

"சீனி, மண்ணெண்ணை விலை உயர்வுக்கு அரசு பொறுப்பில்லையென எதிர்க்கட்சி முதல்வர் திரு. அமிர்தலிங்கம் அமைச்சர் முன்னிலையில் கூறினர். பின்னர் பத்திரிகைகள் தன் பேச்சைத் திரித்து வெளியிட்டதாகத் திரு. அமிர்தலிங்கம் கூறுகின்ருர். அப்படியென்ருல் விலை உயர்வைக் கண்டித்து, விலை அதிகரித்தது சரியில்லையென்று ஏன் அரசுக்கு எதிராக திரு. அமிர்தலிங்கம் இன்றுவரை ஓர் அறிக்கை வெளியிடவில்லை. அரசுக்கு எதிராக வெளியிட ஏன் இந்தத் தயக்கம்?

"அமைச்சர் அத்துலத்முதலி ஒரு சட்டத்தரணி. எனக்கு நேரில் தெரிந்தவர். அவரை நானே அல்லது திரு. குமார் பொன்னம்பலமோ அழைத்துத் தனிப்பட்டமுறையில் விருந்துவைத்திருந்தால் கூட்டணியினர் மேடைமேடையாக எங்களைத் தூற்றியிருப்பார்கள்.

### பத்திரிகை வர்ணிக்கிறது

கூட்டணிப் பத்திரிகையே இன்று கூட்டணித் தலைவர்களுக்கு எதிராகப் பிரசாரஞ் செய்கிறது. பிரதமரைப் பாராட்டியதற்காக ஒரு கூட்டணி எம். பி. மீது அப்பத்திரிகை போர் தொடுத்துள்ளது. அதனால் அந்த எம். பி. வீட்டோடு இருந்துவிட்டார். மக்கள் மத்தியில் தலைகாட்டமுடியாத நிலை. அமரர் போன்னம்பலத்தை துரோகி என்று வர்ணித்த அதே பத்திரிகை, கூட்டணித் தலைவர்களைத் துரோகிகள் என வர்ணிக்கத் தொடங்கிவிட்டது.

"இளைஞர்கள் பலர் பலியாகிய பின், தாய்மார்கள் பலர் கற்பழிக்கப்பட்ட பின், தமிழர்கள் பலர் கொலைசெய்யப்பட்ட பின் இன்று கூட்டணியினர் அரசுடன் சேருவதற்கு ஜனாதிபதியைச் சந்திக்கத் துடிக்கிருர்கள், காத்திருக்கிருர்கள்.

47-ம் ஆண்டு முதல் 56-ம் ஆண்டுவரை அமரர் ஜி. ஜி. யின் தலைமையின் கீழ் தமிழன் தலைநிமிர்ந்து வாழ்ந்தான். இனக்கலவரம் ஏற்படவில்லை தமிழன் இன்னல் படவில்லை அதன்பின்னரே இனக்கலவரம் ஏற்பட்டு தமிழன் இன்னல் பட்டான்.

### ஆயத்தம் செய்ய வேண்டும்

தமிழ் ஈழம் பெறுவதானால் ஒருவழிதான் உண்டு, பேசாமல் இருந்து அதற்கான ஆயத்தங்களை செய்ய வேண்டும் உலக நாடுகள் தனி நாடாகப் பிரிந்த விதத்தை ஆராய வேண்டும். அதை விட்டு பாராளுமன்றம் சென்று ஜப்பான் ஜீப் பெற்று ஆசன போசன வாகனவசதிகளை அல்லும் பகலும் அனுபவித்துக் கொண்டு தமிழ்ஈழம் பெறமுடியாது.

சமஅந்தஸ்து தராதஅரசு சமஷ்டி ஆட்சி தராத அரசு தமிழ்ஈழம் தருமா? நாட்டைப் பிரித்து ஒப்படைக்குமா? அர[illegible] அதற்கு வேறு வழிதான் உண்டு.

### 3 ஆண்டுகள் பொறுத்தோம்

கூட்டணியினர் தமிழ்ஈழம் பெற்றுத்தருவார்கள் என 3 ஆண்டுகள் பொறுத்திருந்தோம். 3 ஆண்டுகளுக்குள் நாங்கள் ஏதாவது பேசியிருந்தால் கெடுத்துவிட்டீர்கள் என எங்கள் மீது போட்டிருப்பார்கள். அவர்களால் தமிழ் ஈழம் பெறமுடியாது என்று இன்று தெரிந்து விட்டது. அதனால் நாங்கள் கூட்டணியின் முகமூடியை கிழித்தெறியப் போகின்ருேம்.

அமரர் ஜி.ஜி.யால் வளர்க்கப்பட்டவர்கள் எல்லாம் அவருக்கு எதிரியானார்கள். அதுதான் அவருக்கு ஏற்பட்டகஷ்டம் அமரர் ஜி. ஜி. யால் அரசியலுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட அமரர்கள் வன்னியசிங்கம், செல்வநாயகம், குமாரசாமி எல்லாரும் அவரை எதிர்த்தார்கள். இன்று திரு. சிவசிதம்பரம், திரு. திருநாவுக்கரசு, திரு. ஆனந்தசங்கரி அந்தவரிசையில் இடம்பெற்றுள்ளனர்.

தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் கூறியதாவது தமிழினத்தின் ஈடேற்றத்துக்குப் பாடுபடும் ஒரே ஒரு தமிழ்க்கட்சி அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சிதான் அமரர் செல்வநாயகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி இன்று இல்லை. அமரர் பொன்னம்பலத்தால் உருவாக்கப்பட்ட தமிழ்க்காங்கிரஸ் தான் இன்றும் தமிழினத்துக்குப் பாடுபட்டு வருகின்றது.

### இலட்சியத்தைக் கைவிடவில்லை

அமரர் பொன்னம்பலம் லட்சியத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடவில்லை. தனிச்சிங்களசட்டத்தை அவர் ஏற்கவில்லை. ஆனால் தமிழரசுக்கட்சியினர் பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் தனிச் சிங்களச்சட்டத்தை ஏற்றுக் கொண்டனர். சிங்களத்தை ஏற்காத ஒரே கட்சி தமிழ்க் காங்கிரஸ் தான்.

அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் அமைச்சராக இருந்த போது தமிழ்பிரப்தேசங்களை அபிவிருத்தி செய்தார். ஆனால் 65-ம் ஆண்டு தேசிய அரசில் தமிழரசு மந்திரி அமரர் திருச்செல்வம் இருந்து 5 ஆண்டுகள் அபிவிருத்தி எதுவுமே செய்யவில்லை. பின் திரு. பிரேமதாசா மந்திரிப் பதவி ஏற்ற பின்தான் வடபகுதியில் அராலி வட்டுக்கோட்டையில் நன்னீர் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இலங்கையைப்பிரிக்க வேண்டும் என அமரர் ஜி.ஜி. எந்த மேடையிலும் கூறியதில்லை. பதவிக்கு வருவதாக அவர் மக்களை ஏமாற்ற விரும்பவில்லை.

ரயில் பாலம் வேண்டுமா? தமிழ்ஈழம் வேண்டுமா? என்று தேர்தல் காலத்தில் கேட்ட கூட்டணியினர் இன்று அபிவிருத்தி தான் அவசியம் என்கிருர்கள்.

சட்டத்தரணி கே. வி.எஸ். சண்முகநாதன் கூறியதாவது கடந்ததேர்தலில் அமரர். ஜி. ஜி. பொன்னம்பலம் நிச்சயம் வெற்றிபெற்று வட்டமேசை மகாநாட்டின்மூலம் தமிழர் பிரச்னைக்கு நிரந்தரமுடிவு காண்பார் என நாங்கள் நம்பியிருந்தோம். ஆனால் அது வேறுவிதமாகமுடிந்தது விட்டது.

அமரர் ஜி. ஜி. தமிழன் ஒன்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா! என்றுதான் சொன்னர். 'சிங்களவனைக் கொல்லடா' என்று அமரர் ஜி. ஜி. சொல்லவில்லை. அவர் எந்த மேடையிலும் சிங்களவர்களைத் தாக்கிப் பேசவில்லை தமிழர் உரிமைகளைத்தான் கேட்டார். அதனல்தான் இன்றும் சிங்களமக்கள் அவர் மீது அன்பும் மரியாதையும் வைத்திருக்கிருர்கள்.

வழக்குகளில் டாக்டர்களையும், நிபுணர்களையும் குறுக்கு விசாரணை செய்வதில் உலகில் அவருக்கு ஈடாக ஒருவருமே கிடையாது.

சிங்களவர்களுடன் நேரடி மோதலைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுவார். ஆனல் தமிழனை இழிவுபடுத்தினவர்களைச் சும்மாவிடமாட்டார். ஒரு முறை பாராளுமன்றத்தில் தமிழனைக் குறை சொன்ன பிலிப் குணவர்த்தனவை தாக்கச் சென்றுவிட்டார்.

(7-ம் பக்கம் பார்க்க)

'ஈழநாடு' ஏட்டுக்கு இன்று வயதுஇருபத்தொன்று!

## பணி செய்ய வாழ்த்துகின்றேம்!

சின்னஞ் சிறியதோர் ஏடு - அதி
சிறந்ததோர் நாளேடு!
இன்பத் தமிழ்தரும் ஏடு . அது
எங்களின் ஈழநாடு!!

தமிழருக் கென்ஞெரு ஏடு - தமிழ்
வளர்க்கின்ற ஈழநாடு!
தமிழரின் தலைநகராம் - எம்
யாழ்நகர் அதன் வீடு!!

ஈரெட்டுத் திசைகளிலும் - தினம்
நிகழ்கின்ற செய்திகளை
ஈர்நான்கு பக்கத்திலும் - தாங்கி
தினம்வரும் ஈழநாடு!!

காரத்தில் கடுகினைப்போல் - சிறு
கதை பாடல் கட்டுரைகள்
வாரத்தில் ஞாயிறுகாலை - தரும்
ஈழநாடு வாரமலர்!

பக்கச்சார் பேதுமின்றி - உண்மைச்
செய்திகள் தரும்பணியை
எக்காலமும் தொடர்ந்து - இனிதே
செய்திட வாழ்த்துகின்ருேம்!!

--முருகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வீடியோ' படக்காட்சி:

# "மறைமுகமாக நாங்கள் என்றும் ஆதரிக்கவில்லை"

## கலந்துரையாடலில் மேயர் உரை

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோதமாக நடைபெற்று வரும் 'வீடியோ' படக்காட்சிக்கு யாழ். மாநகராட்சி மன்றத்தினரும் உடந்தை என்ற விதத்தில், யாழ். தியேட்டர் உரிமையாளர்கள் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியுள்ளனர். நாங்கள் சிறுதளவேனும் ஆதரவில்லை; மகஜர் அனுப்புமுன் என்னிடம் அல்லது சபை உறுப்பினரிடம் கேட்டிருக்க வேண்டும்.

யாழ். மாநகர சபைக் கமிட்டி அறையில் 'வீடியோ' படக்காட்சி தடை பற்றி நடந்த கலந்துரையாடலில், யாழ். நகர முதல்வர் திரு. இராசு விஸ்வநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. விஸ்வநாதன் மேலும் கூறியதாவது: மறைமுகமாக வீடியோ காட்டுவதற்கு தாம் உதவிபுரியவில்லை. மறைமுகமாக தாம் ஆதரவளிப்பதாகத் தியேட்டர் முதலாளிமார் புகார் செய்திருப்பது வேதனையளிக்கிறது. புகார் அனுப்புமுன் அது பற்றி ஆராய வேண்டும். நாம் ஒரு போதும் சட்ட விரோதமான செயலுக்கு ஆதரவளிக்க மாட்டோம். இந்தச் சட்டவிரோதமான செயல் நடக்கக்கூடாது.

### அமைதிக்குப் பங்கம்

மாநகர சபை உறுப்பினர் ஜனாப். மொகிதின் பிச்சை கூறியதாவது: "அமைதிக்குப் பங்கம் ஏற்படக் கூடிய நிலை உருவாகி வருகிறது. சிறுவர்கள் கெட்டுப் போகின்றார்கள் பொலிசாருக்கு இதுபற்றித் தகவல் கொடுக்கப் பொதுமக்கள் தயங்குகிறார்கள். தகவல் கொடுப்பவர்கள் தாக்கப்படலாம் என அஞ்சுகிறாகள். பொலிசார் உடன் நடவடிக்கை எடுத்து முற்றாக ஒழிக்க வேண்டும்."

ராஜா தியேட்டர் முகாமையாளர் திரு. நடராசா பேசுகையில் கூறியதாவது: வீடியோ படக்காட்சிகள் காட்டப்படுவதால் தியேட்டர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கையிலுள்ள தியேட்டர்களில் காண்பிக்கப்படாத பல புதிய தமிழ்ப்படங்கள் வீடியோ மூலம் காட்டப்படுகிறது. அதனால் மக்கள் எல்லோரும் விடியோவையே விரும்பிப் பார்க்கிறார்கள்.

### தொடர்ந்து 10 தினங்கள்

சுதுமலையில் தொடர்ச்சியாக 10 தினங்கள் வீடியோப் படக்காட்சி காண்பிக்கப்பட்டது இதுதவிர ஆங்காங்கே வீடியோ படக்காட்சிகள் தினமும் காட்டப்படுகின்றன.

### கிராமத்திலும் காட்டப்படுகிறது

ஸ்ரீதர் தியேட்டர் முகாமையாளர் பேசுகையில் கூறியதாவது: யாழ்நகரில் மட்டுமல்ல கிராமப்புறங்களிலும் வீடியோ படம் காட்டப்படுகிறது. தினமும் இரவில் 2 காட்சிகள் காட்டப்படுகிறது. அதனால் பிள்ளைகள் அதனை விரும்பிப் பார்க்கிறார்கள். அதனால்பிள்ளைகளின் படிப்பும் பாதிக்கப்படுகிறது.

ஜனாப். முகமட்ராஜா பேசுகையில் கூறியதாவது, "78-ம் ஆண்டு முஸ்லீம் மக்களுக்கும் கத்தோலிக்க மக்களுக்கும் இடையில் ஒரு இனக்கலவரம் மூண்டது. இருபகுதியிலுமுள்ள தீய சக்திகள் பரப்பிய பொய் வதந்தியினால்த்தான் அந்தக் கலவரம் ஏற்பட்டது. அது மாதிரிமாரியான ஒரு கலவரம் ஏற்படுவதை முஸ்லீம் மக்களாகிய நாம் விரும்பமாட்டோம். 'வீடியோ' படக்காட்சி, காண்பிக்கப்படும் போது பல கழகத்தைச் சேர்ந்தவர்களும் அப்படக் காட்சியைப் பார்ப்பதற்குச் செல்வார்கள். அப்படிப்பட்ட படக்காட்சி ஒன்று யாழ். முஸ்லிம் தெருவில் நடைபெற்ற ஹிஜ்ரி விழாவிலும் காண்பிக்கப்பட்டது. அப்படக் காட்சியைப் பார்ப்பதற்கு நல்லவர்களும் தீயவர்களும் வருவார்கள் என்ற காரணத்தினால் அன்றைய தினம் மீண்டுமொரு கலவரம் ஏற்பட்டுவிடுமோ என்று நாம் பயப்பட்டோம். இரு சமூகங்கள் மத்தியில் குரோதத்தை ஏற்படுத்த கூடிய படக்காட்சிகளும் 'வீடியோ' மூலம் காட்டப்படுவதால் அதை உடனடியாகத் தடை செய்ய வேண்டும்."

### முஸ்லீம் மக்கள் வேதனை

புனித மகானுடைய தினத்திலும் 'வீடியோ' படக்காட்சி காட்டப்பட்டதால் முஸ்லீம் மக்கள் வேதனை அடைந்தனர்.

தினமும் முஸ்லீம் பகுதியிலுள்ள ஒவ்வொரு சந்து பொந்துகளிலும் 'வீடியோ' காட்டப்படுகிறது. அதனால் மக்களின் பணம் விரையப்படுவதுடன், மக்கள் சுகாதார ரீதியிலும் பாதிக்கப்படுகிறார்கள், எமது மார்க்கத்திற்கு ஒவ்வாதது சினிமா அத்தகைய சினிமாக்காட்சி முஸ்லீம் பகுதியில் காட்டப்படுவது கட்டாயமாகத் தடைசெய்யப்பட வேண்டும்.

தமாசாவரி உத்தியோகத்தர் திரு. சிவஞானசேகரம் பேசுகையில் கூறியதாவது: எமக்குத், தகுந்த வாகனப போக்கு வரத்து வசதியும், பொலிசாரின்உதவியும்கிடைத்தால் வீடியோ படக்காட்சியை தடைசெய்ய எம்மால் முடியும் என்றார்.

### வீடியோ சாதனம் ஒப்படைப்பு

யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. என். ரி. செல்லத்துரை பேசுகையில் கூறியதாவது: பண்டத்தரிப்பில் வீடியோ படக்காட்சி காட்டப்பட்டபோது படக்காட்சி காட்டியவர்களைப் பொலிஸார் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததாகவும், விசாரணையின்பின் வீடியோ சாதனங்கள் திருடபி ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறினார்.

### ஜனாதிபதிக்கு கோரிக்கை

திரு. எம். எஸ். சுல்தான் பேசுகையில் கூறியதாவது: யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டர்களில் புதிய தமிழ்படங்களை இறக்குமதிசெய்து காட்ட ஏற்பாடு செய்யுமா, மாநகர முதல்வர், ஜனாதிபதிக்கு கோரிக்கைவிடவேண்டும், என்று கேட்டுக்கொண்டார்.

சட்டத்தரணி ஜனாப் இமாம் கூறியதாவது: பொலிஸ்பொது மக்கள் நல்லுறவுக் கமிட்டியினர் ஒருவரே முஸ்லிம் பகுதியில் வீடியோ படக்காட்சியை ஏற்பாடு செய்து வருகிறார். அவரை அக்கமிட்டியிலிருந்து நீக்கிவிடவேண்டும்.

### பெரியவர்களும் பார்க்கிறார்கள்

சிறியவர்கள் மட்டுமல்ல பெரியவர்களுக்குகூட இந்த வீடியோ பைத்தியம்பிடித்துள்ளது. என்னுடன் கதைத்துக் கொண்டிருந்த ஒருவர் நேரத்தைப்பார்த்துவிட்டு இன்று புதிய படம் 'ஆடு [illegible]டம்' பார்க்க போகவேண்டுமெனக்கூறிச்சென்றுவிட்டார்.

ஜனாப் முகமத்அலி பேசுகையில் கூறியதாவது: முஸ்லிம் பகுதியில் 29ம் தேதி வீடியோ படம் காண்பிக்கப்பட்டது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வந்து அந்தப்படத்தைப்பார்த்துவிட்டு திரும்பிச் சென்றார். மறுநாள் 30ம் தேதியும் வீடியோ படம் நடந்தது அன்று பொலிஸ்காரர் வரவில்லை.

பொலிஸ் அதிபர்: பொலிஸார் மீது எவ்வித தவறும் இருந்தால் அதனை என்னிடம் சொல்லுங்கள் நான் விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

### பொலிஸாரில் குறையில்லை

ஜனாப் எம். எஸ். சுல்தான்: பொலிஸார் மீது குறைசொல்வது சரியல்ல. என் வீட்டிற்கு பக்கத்தில்தான் வீடியோ நடந்தது. பொலிஸ்காரர் வந்து பார்த்துவிட்டு, பொலிஸ் நிலையத்திற்கு டெலிபோன்செய்ய சென்றார். அந்த சமயம், வீடியோ யந்திரங்களை டாக்ஸியில் ஏற்றிச்சென்றுவிட்டனர். பொலிஸ் நிலையத்திலிருந்து வந்த கோஷ்டி, நாவாந்துறையில் நடந்த வீடியோ படக்காட்சியை தடைசெய்து நடவடிக்கை எடுத்தது.

ஆணையாளர்: வீடியோ படக்காட்சி நடந்தால் அந்த இடத்தைப் பற்றி 258 என்ற இலக்கத்திற்கு போன்பண்ணினால், நாங்கள் அதுபற்றி பொலிசாருக்கு தெரிவிப்போம் இரவு 10 மணிவரை 258 இலக்கத்திற்கு போன் பண்ணலாம்.

ஜனாப் சுல்தான்; முஸ்லிம் பகுதியில் இரவு 11 மணிக்கு தான் காட்சி ஆரம்பமாகிறது ஆதலால் தொலைபேசி வசதியை 11 மணிவரை செய்தல் நல்லது.

நகர முதல்வர்; 10 மணிவரைதான் இருப்பார்கள்.

ஜனாப் ஹமீட்: வீடியோஉரிமையாளரே வேண்டுமென்று தொலைபேசியில் பொய்த்தகவல்தந்து அதனால் பொலிஸார் ஏமாற்றப்பட்டால் என்னசெய்வது.

ஆணையாளர்: அப்படி நடக்காது முதலில் மாநகரசபை உத்தியோகத்தர் அந்த இடத்திற்குசென்று உண்மையென அறிந்தபின்தான் பொலிஸாருக்கு அறிவிப்பார்.

ஜனாப் சுல்தான்: முஸ்லிம் பகுதியில் இரவு 11 மணிக்கு தான் படம் தொடங்குகிறது, இரவு 7 மணிமுதல், மக்கள் வீடியோசெட் வருகையைஎதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் படம்காட்டப்படும் மண்டபத்தின் வெளிக்கதவில் ஒரு கோஷ்டியினர் நிற்பார்கள் அவர்கள் பொலிஸார் வந்தால் எச்சரிக்கை செய்வார்கள். திடீரென இடத்தை மாற்றுவார்கள் வீடியோ ஏற்பாடு செய்பவர்கள், துணிந்தவர்களாக இருக்கிறார்கள். 'விடியோ' படம் காட்ட பொது மக்களே உடந்தையாக இருக்கிறார்கள். பொலிஸாரினால் அதனால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அரசு புதிய தமிழ்ப் படங்களை இறக்குமதி செய்து இங்கு வெளியிட்டால் 'விடியோ' தொல்லை ஒழியும்.

### பொலிஸார் போகின்றனர்

பொலிஸார் வந்தாலும் வேறு 'டியூட்டி' இருக்கிறது; நிற்க முடியாது என்று கூறி விட்டுச் [illegible] அவர்கள் போனபின் அவ்விடத்தில் [illegible]

சாந்தி தியேட்டர் மனேஜர் திரு. ஜி. பி. இராசநாயகம் கூறியதாவது:- புதிய தமிழ்ப் படங்கள் இங்கு திரையிடப்படாததினால்தான், 'வீடியோ' விற்கு மக்கள் செல்கின்றார்கள். திரைப்பட கூட்டுத்தாபனம் புதிய தமிழ்ப் படங்களை இங்கு திரையிடுவதன்மூலமே இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாணமுடியும், இது பற்றிக் கூட்டுத்தாபனத்தின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும்,

கபமுதல்வர்: வீடியோ காட்டப்படுவதனால் மக்கள் மனதில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. பலர் எமக்கு இது பற்றி புகார்செய்துள்ளனர். யாழ். முஸ்லிம் அபிவிருத்திச் சங்கமும் புகார்செய்திருந்தது. அமைதியான சூழ்நிலை மாறி வருகிறது எனப் புகார்கள் கூறுகின்றனர்.

### சிறுவர்கள் கெடுவார்கள்

சிறுவர்கள் இதனால் கெட்டுப்போகின்றார்கள். இதனை தடுத்துநிறுத்த வேண்டும். சட்டவிரோதமாகக் காட்டப்படுகிறது. ஈச்சமோட்டையில் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. பொலிஸார் நடவடிக்கை எடுத்ததையிட்டுப் பாராட்டுகிறேன். நாமும் இதற்கு எதிராக நடவடிக்கை எடுத்துவந்துள்ளோம்.

ஜனாப் சுல்தான்: பொலிசார் நடவடிக்கை எடுக்கக் கஷ்டமாக இருக்கும், எல்லோரையும் பொலிசாருக்குத் தெரியாது, சுல்தான் என்ற சந்தேகநபரிடம் பொலிசார் சென்று 'நீர்தான் சுல்தான்?' என்று கேட்டால், அவர் நான் வேறுஆள் என்று கூறியதும் பொலிஸார் ஒன்றும் செய்யமுடியாமல் போய்விடுகிறார்கள். ஆதலால் பொலிசாருக்கு பொதுமக்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் பயன்கிடைக்கும். பாடசாலைகளிலும் வீடியோ காட்டப்படுகிறது,

யாழ். முஸ்லிம் அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதி: அமைதி நல்லெண்ணம். நிலைநாட்டப்படவேண்டும், நாம் இதன் தீமைபற்றி ஆராய்ந்து உடன் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தோம்.

### தணிக்கை செய்யப்படாத

தணிக்கை செய்யப்படாத புதிய தமிழ்ப்படங்கள் காட்டப்படுவதால் மக்கள் விரும்பிச் செல்கின்றார்கள். சில வேளைகளில் பெற்றோரிடம் பிள்ளைகள் படம்பார்க்கப் பலவந்தமாகப் பணம் கேட்கிறார்கள். கொடுக்காவிடில் திருடவும் முற்படுகிறார்கள், இரவு 11 மணிக்குப் படம் தொடங்குவதனால் அயலவர்கள் நித்திரைசெய்யமுடியாமல் இருக்கிறது. 'வீடியோ' பற்றி எல்லா இடங்களிலும் சுவரொட்டி ஒட்டப்படுகிறது. ஒலிபெருக்கிமூலமும் விளம்பரப்படுத்துகிறார்கள். இதற்குப் பொலிசார் அனுமதி கொடுக்கிறார்கள.

பொலிஸ் அதிபர்: அப்படியிருக்காது, வேறுநிகழ்ச்சிக்கு அனுமதிபெற்று 'வீடியோ' பற்றி விளம்பரம் செய்யக் கூடும்.

முஸ்லிம் அபிவிருத்திச்சங்கப் பிரதிநிதி: இரவு 2 மணிக்குத்தான் படம் முடிகிறது, அதன் பின் ஒரே கூச்சலாகஇருக்கும். பெண்களுக்குப் புறம்பான இடம் கொடுக்கப்படுவதில்லை, ஒரே இடத்தில் ஆண்களுடன் இருந்து பார்க்கிறார்கள், இதனால் பலவித அசம்பாவிதங்கள் நடக்கலாம். பாண்டியந்தாழ்வில் ஒரு சம்பவம் நடந்துள்ளது.

சட்டத்தை நிலைநாட்ட வேண்டும், அமைதி கடைப்பிடிக்கப்படவேண்டும். அதனையே விரும்புகின்றோம். எல்லாச் சமுதாயத்திலும் சில தீய சக்திகள்இருக்கின்றன, எல்லா தீயசக்திகளும் ஒன்றுசேர்ந்தால் விளைவு பாரதூரமானதாக இருக்கும். ஆதலால் ஆரம்பத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொலிஸ் அதிபர்; நாங்கள் ஏற்கனவேயிருந்து நடவடிக்கை எடுத்துவருகிறோம். இனி மேலும் நடவடிக்கை எடுப்போம். (கொ)

---

## மன்னார் செய்திகள்

மன்னாரிலுள்ள பாலர் பகல் விடுதி சிறார்களுக்கு லயன்ஸ் கழகம 500 ரூபா பெறுமதியான பொருட்களை அன்பளிப்புச் செய்தது

மேற்படி சம்பவம் அண்மையில மன்னார் பாலர் பகல் விடுதயில லயனஸ் கழகத தலைவா திரு. என். நாகராசா ஜே. பி. தலைமையில் நடைபெற்றது. லயன்ஸ் கழகப் பிரமுகா சங். சகோதரர் யோசப், திரு. புண்ணியபுவிராசசிங்கம், கலாநிதி றுேபர்ட் குரூஸ் உட்பட பல பிரமுகர்கள் இவ்வைபவத்தில கலந்துகொண்டனர்.

### ஹிஜ்ரி விழா: புலமைப் பரிசில்

ஹிஜ்ரி நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட முதலாவது இடத்தைப் பெற்று புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொண்டதற்காக, மன்னார் முஸ்லிம் தெருவைச் சேர்ந்தவரும், அல்-அஸ்ஹர் மகாவித்தியாலய மாணவருமான செல்வன் அப்துல் கபூர் முகம்மது பிச்ரியை இலங்கை ஜமீய்யதுல் இஸ்லாம் சங்கம் பாராட்டியுள்ளது.

### புலவு விவசாயிகள்மீது நடவடிக்கை?

இவ்வாண்டு மன்னார் மாவட்டத்தில் சட்ட விரோதமாகச் குளப்படுகை நிலங்களில் விவசாயம் செய்த விவசாயிகள் மீது மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமலஸ் பெர்னாண்டோவால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவந்தது. இதுசம்பந்தமாக விவசாயம் செய்யப்பட்ட நெல்லை சுவீகரிக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுவந்தன.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சரின் உத்தரவுப்படி இச்சட்ட நடவடிக்கைகள் யாவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இதனால் புலவு விவசாயம் செய்யப்பட்ட நெல்லை பறிமுதல் செய்யாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### மின்சாரம் வழங்கியமைக்கு பாராட்டு

மன்னார் மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்று மின்சக்தி, [illegible] சாலைகள் அமைச்சர் [illegible] பி. விஜயதுங்காவால் [illegible] கப்பட்ட மின்சாரத்திட்டத்தை ஏற்று அதை நடைமுறைப்படுத்த அரசு இணங்கியிருப்பதை அறிந்து மன்னார் மாவட்ட மக்கள் அரசிற்கு பாராட்டை தெரிவித்துள்ளார்கள் என எருக்கலம்பிட்டி ஐ. தே. கட்சி கிளையின் தலைவர் ஜனாப் பி. எம். எம். [illegible] தெரிவித்தார்.

### வைத்திய அதிகாரிபற்றி புகார்

எருக்கலம்பிட்டி அரசினர் மருத்துவச்சாலையில் கடமையாற்றும் வைத்திய அதிகாரி விடுமுறையில் சென்றால் அவருக்குப் பதிலாக வேறு எவரும் நியமிக்கப்படுவதில்லை. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

......

## அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் 3வது சிரார்த்த தினத்தன்று அமரரின் ஞாபகார்த்தமாக நாவாந்துறை புனித நிக்கிலஸ் தேவாலயத்தில் அன்னதானம் வழங்கப்பட்டதுடன் திருப்பலிப் பூசையும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. (கொ)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

'ஈழநாடு' ஆதரவு உதைபந்தாட்டப் போட்டி

# மயிலங்காடுகொக்குவிலுக்கு சாம்பியன் கேடயங்கள்

(பலாலி)

வயாவிளான் ஞானவைர சனசமூகநிலையம் 'ஈழநாடு' ஆதரவில் நடாத்திவந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் முடிவடைந்தன. தைப்பொங்கல் தினத்தன்று ஆரம்பமாகி நடைபெற்று வந்த இச்சுற்றுப் போட்டி 7 வீரர், 11 வீரர் என இரு பிரிவுகளாக நடாத்தப்பட்டது. இரு பிரிவிலும் மொத்தம் 43 கோஷ்டிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. முதலாவதாக நடைபெற்ற 7 வீரர் ஆட்டத்தில் கொக்குவில் சன் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், ஏழாலை ஜிம்மி கார்ட்டர் விளையாட்டுக்கழகமும் கலந்துகொண்டன. இடபோட்டியை திரு. ரி. சிவரத்தினம் ஜே.பி. ஆரம்பித்துவைத்தார். அடுத்து இடம்பெற்ற 11 வீரர் போட்டியில் ஈவினை பறக்கும் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மயிலங்காடு ஸ்ரீமுருகன்விகழகமும்கலந்துகொண்டன. திரு. வீரசிம்பாப்பிள்ளை ஜே.பி. இப்போட்டியை ஆரம்பித்துவைத்தார். போட்டி முடிவில் நிலையத் தலைவர் எஸ். சுப்பிரமணியம் தலைமையில் பரிசளிப்பு விழா இடம்பெற்றது. பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன் சுகுணேந்திரன் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்களை வழங்கினார். வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. ஏ. இராமசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். சனசமூக நிலையங்களின் மேற்பார்வையாளர் திரு. வீ. கிருஷ்ணசாமியும், வலி வடக்குப் பகுதி விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ். முருகையாவும் பேச்சாளர்களாகக் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

## சாம்பியன் போட்டி

7 வீரர் போட்டி 3-30 மணிக்கு ஆரம்பமாகியது. இதில் கலந்துகொண்ட ஏழாலை ஜிம்மி கார்ட்டர் விளையாட்டுக் கழகமும், கொக்குவில் சன் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் ஆரம்பம் முதல் மிகவும் விறுவிறுப்பாகவே மோதிக்கொண்டன. இந்நிலையிலும் போட்டி ஆரம்பமாகி 3வது நிமிடத்தில் சன் ஸ்ரார் கழகம் முதலாவது கோலைப் போட்டுக்கொண்டது. இரண்டாவது கோல் 5வது நிமிடத்திலும், பின் 10 நிமிடத்தில் மூன்றாவது கோலையும் போட்டுக்கொண்டது. இந்நேரம் போட்டி திடீரென உக்கிரமான நிலையை அடைந்தது. சன் ஸ்ரார் கழகத்தின் 3வது கோலின் சில நிமிடத்தின் முன்பாகவே ஜிம்மி கார்ட்டர் கழகம் ஒரு கோலைப் போட்டுக்கொண்டது. 3-1 என்ற கோல் கணக்கில் இடைவேளை கொடுக்கப்பட்டது. இடைவேளையின் பின் ஜிம்மி கார்ட்டர் கழகப் பகுதியினுள் பந்து இருந்தும், கோல் எதுவும் போடமுடியவில்லை. போட்டி முடிவில் 3-1கோல் கணக்கிலேயே கொக்குவில் சன்ஸ்ரார் கழகம் வெற்றியீட்டி அமரர் சி. கந்தவனம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தையும், திருமதி ஈ. எஸ். முருகையாவினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட அன்னாரது சகோதரன் ஏ. ரி. எஸ் கே. சிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தையும் தனதாக்கிக்கொண்டது. இரண்டாவது இடத்தைப் பெற்ற ஏழாலை ஜிம்மி கார்ட்டர் விளையாட்டுக் கழகத்திற்கு சுப்பிரமணியம் அன்னமுத்து ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது. இப்போட்டிக்கும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திரு. சி. எஸ். அருள்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

4-30 மணிக்கு ஆரம்பமான 11 வீரர் போட்டியில் ஈவினை பறக்கும் இளைஞர் விளையாட்டுக் கழகமும், மயிலங்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும் கலந்துகொண்டன. இப்போட்டியின் ஆரம்பத்தில் இருந்த விறுவிறுப்பு முடிவால் காணமுடியவில்லை. இருதரப்பு கோஷ்டியிலும் பிரபல்யமான முன்னணி வீரர்கள் விளையாடியமையால் போட்டியின் தரம் சமமாகவே காணப்பட்டது. போட்டி ஆரம்பமாகி 18வது நிமிடத்தில் ஸ்ரீ முருகன் வி. கழகத்தின் முன்னணி வீரர் சின்னராசா ஒரு கோலைப் போட்டு தனது கோஷ்டிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தார். கலாமோகன், சின்னராசா ஆகியோர் அவ்வப்போது ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்டனர். கொன்சலாஸின் விளையாட்டு ரசிகர்கள் எதிர்பார்த்த அளவுக்கு அமையவில்லை. காரணம் எதிர் தரப்பினரின் மிகுந்த கண்காணிப்பில் அவர் வைக்கப்பட்டிருந்தமையே. போட்டி சமமாகவே முடியுமென எதிர்பார்த்திருந்த ரசிகர்களுக்கு ஆதரவாகவும், பறக்கும் இளைஞர் வி. கழகத்திற்கு சாதகமாகவும், ஒரு பனல்டி உதை கிடைத்தது: இந்த பனல்டி உதையை வீரர் கொன்ஸலாஸ் பயன்படுத்த இருந்தது நல்லதாகவே முடியுமென எதிர்பார்த்தனர். இவர் இலங்கை உதைபந்தாட்டக் குழுவில் அங்கம் வகித்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்குக் கிடைத்த பனல்டி உதையை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டார். இது அவரது சக வீரர்களுக்கும், ரசிகர்களுக்கும் மிகுந்த ஏமாற்றமாகவே இருந்தது. பறக்கும் இளைஞர் வி. கழகத்தினரின் உக்கிரமான கோல் உதைகளை ஸ்ரீ முருகன் வி. கழக கோல் காப்பாளர் பல முறை சாதுரியமாகத் தடுத்துக்கொண்டார். இரு தரப்பு கோல் காப்பாளர்களும் திறமை மிக்கவர்கள். எனினும் ஸ்ரீமுருகன் காப்பாளருக்கே சோதனை மிகுதியாக இருந்தும் அவ்வப்போது அவற்றை முறியடித்துக்கொண்டார். இடைவேளையின் பின்பு இரு தரப்பினருக்கும் கோல் போடக்கூடிய சந்தர்ப்பம் பல கிடைத்திருந்தும் தகுந்த முறையில் முன்னணி வீரர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. முடிவில் 1 - 0 கோல் கணக்கில் மயிலங்காடு ஸ்ரீ முருகன் வி. கழகம் வெற்றியீட்டி அமரர் சின்னக்குட்டி கனகசபை ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்தையும், வ. முருகையா அன்பளிப்பு வெற்றிக்கிண்ணத்தையும் தனதாக்கிக் கொண்டது. இரண்டாவது இடத்தைப் பெற்ற ஈவினை பறக்கும் இளைஞர் வி. கழகத்துக்கு யாழ்ப்பாண பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. எம். பத்மநாதன் அன்பளிப்பு வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டது. இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. எம். பத்மநாதன் கடமையாற்றினார்.

சிறந்த விளையாட்டுக் கழகமாகத் தெரிவு செய்யப்பட்ட பலாலி அன்னை வி. கழகத்திற்கு ஒட்டிசுட்டான் வாலிபர் [illegible] பொறுப்பதிகாரி திரு. எஸ். மரியநாயகம் அன்பளிப்பு வெற்றிக்கிண்ணமும், சிறந்த விளையாட்டு வீரராகத் தெரிவு செய்யப்பட்ட கொழும்புத்துறை - ஜெட்லையினேஸ் வி. கழக வீரர் வசந்தகுமாருக்கு திரு. கே. நாகராசா அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள்முன்னிலையில் நடைபெற்ற இவ் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இவ் விழாவுக்காக வயாவிளான் எங்கும் கலகலப்பாகக் காணப்பட்டதுடன் வீதிகள் தோறும் அலங்கரிக்கப்பட்டும் இருந்தன. இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவுக்குமான பூர்வாங்க ஏற்பாடுகளை சுற்றுப்போட்டி அமைப்பாளரும் நிலையச் செயலாளருமான திரு. எம். ஜெகநாதன் மேற்கொண்டிருந்தார்.

---

"வல்லரசுப் போட்டியில்

# சோவியத்தின் நிலை பயங்கரமாக உள்ளது"

## யாழ்.நகர் கூட்டத்தில் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"நமது நாட்டின் சுதந்திரம், சுயாதிபத்தியம், இறைமை ஆகியனவற்றின்மீது உண்மையாக ஆர்வம் கொண்ட எவரும் இன்று ஆப்கானிஸ்தானில் நடைபெற்றுள்ள சோவியத் ஆக்கிரமிப்பைஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏனெனில் மூன்றாவது உலகநாடுகளில் ஒன்றான ஆப்கானுக்கு நடந்த அதே கதி மூன்றாவது உலகைச் சேர்ந்த நமது நாட்டிற்கும் ஏற்படலாம். ஆகவே சோவியத் யூனியன் ஆக்கிரமித்துள்ளதைக் கண்டித்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது), இலங்கை தேச பக்த வாலிபர் இயக்கம் ஆகியவை இணைந்து யாழ். நிம்மர் மண்டபத்தில் நடத்திய கண்டனக்கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் கூறினார்.

திரு. சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில், இன்று உலகில் இரண்டு பெரும் வல்லரசுகளுக்கிடையிலான போட்டி விரிவடைந்துவருகின்றது. இதில் சோவியத் யூனியனின் நிலை பயங்கரத்தன்மை கொண்டதாகவே உள்ளது. குறிப்பாக மூன்றும் உலகைச் சேர்ந்த நாடுகள் சோவியத் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள இவ்வேளை நமது நாட்டின் சகல [illegible] சக்திகளும் ஒன்றிணைந்து சோவியத் ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்க வெறிக்கு எதிராக அணிதிரள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு. கே. செந்திவேல் பேசுகையில் கூறியதாவது:

"அன்று லெனின், ஸ்டாலின் தலைமையில் சோவியத்நாடு உண்மையான சோஷலிஸ நாடாகவும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக உலக மக்களின் பக்கத்தில் நின்று மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கிவந்தது. ஆனால் இன்று பிரஷ்னேவ் தலைமையில் சோவியத்நாடு தனது சகல சோஷலிஸத் தன்மைகளையும் இழந்து ஆக்கிரமிப்புக்களை நடாத்தும் ஒரு ஏகாதிபத்திய நாடாக மாறியுள்ளது. அதனாலேயே ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கின்றது. மத்திய ஆசியாவின் கேந்திர முக்கியத்துவம் கொண்ட ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சம்பவம் தற்செயலானதொன்றல்ல. உலக மேலாதிக்கப் போட்டியில் மூன்றாவது உலக யுத்தத்தை நோக்கிய பாதையில் செல்லும் சோவியத் யூனியனின் திட்டமிட்ட நடவடிக்கைகளில் ஒரு குறிப்பிட்ட கட்டமாகும். எனவே உலக மக்களோடு சேர்ந்து நமது நாடும் மக்களும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இயக்கத்தை முன்னெடுப்பது அவசியம். (இ)

---

# மக்கள் தேவைகளை அறிந்து செயல்பட அரசு விரும்புகிறது

## சரவணையில் யோகேந்திரா

(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டில் வாழும் மக்களின் தேவைகளை அறிந்து செயல்படவே எமது அரசு விரும்புகிறது. அதனாலேயே தான் கடந்த 5 மாதங்களுக்கு முன் சரவணை மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க சரவணையில் மக்கள் கடை திறக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சரவணையில் மக்கள் கடை ஒன்றைத் திறந்து விற்பனையை ஆரம்பித்துவைத்துப் பேசிய யாழ். மாவட்டச் செயலாளரும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி கூறினார்.

இவ்வைபவத்தில் யாழ் மேலதிக அரசாங்கஅதிபர்கள் திருவாளர்கள் என். பி. ஜெயநாதன், எம். பஞ்சலிங்கம், எஸ். தர்மபாலன், யாழ். விற்பனைத் திணைக்கள உதவிஆணையாளர் திரு. எஸ். பாலசிங்கம், வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். குணநாயகம், பொதுசனத்தொடர்புகள் அதிகாரி திரு. சண்முகசுந்தரம், திரு. வி. இராசேந்திரம் மற்றும் யாழ். செயலக உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

திரு. யோகேந்திரா தொடர்ந்து பேசுகையில், சரவணை மக்களைப்போன்றே புங்குடுதீவு மக்களும் புங்குடுதீவு அபிவிருத்திச் சபை மூலம் தமது கிராமத்திலும் ஒரு மக்கள் கடையைத் திறந்துவைக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர். இம்மாத முடிவிற்குள் அங்கும் ஒரு மக்கள்கடை திறக்கப்படும் என்றார். (கொ)

---

யாழ். மாவட்டத்தில்

# உல்லாசப்பயணத்துறையை அபிவிருத்தி செய்ய ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உல்லாசப் பயணத்துறையை விருத்தி செய்வது சம்பந்தமான கூட்டமொன்று யாழ். செயலக மகாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திராதுரைசுவாமி தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஹோட்டல் உரிமையாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் எவ்வாறு உல்லாசப்பயணத்துறைகளை விருத்தியடையச்செய்வது, எந்தெந்த இடங்களை விருத்திசெய்வது என்பது பற்றியும் இக்கூட்டத்தில் கருத்துப்பரிமாறல்கள் இடம்பெற்றன.

உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி ஆய்வுகளை மேற்கொள்வதற்காக திரு. யோகேந்திராதுரைசுவாமியினால் நியமிக்கப்பட்ட விசேட குழு தனது அறிக்கையை ஏற்கனவே அரசிடம் சமர்ப்பித்துள்ளது என்று உயர் அதிகாரி ஒருவர் கூறினார். (கொ-இ)

---

# காதலித்து திருமணம் செய்தவர் தற்கொலை!

(பண்டத்தரிப்பு)

காதலித்துத் திருமணம் செய்துகொண்ட 20 வயது இளம்பெண் ஒருவர் தமக்கு ஏற்பட்ட தொய்வு நோயின் கொடுமை தாங்க முடியாது கிருமிநாசினி அருந்தி தன்னுயிரை மாய்த்துக்கொண்ட பரிதாப சம்பவம் சண்டிலிப்பாயில் நடைபெற்றுள்ளது.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த பவானி என்னும் மேற்படி இளம் பெண்ணின் மரண விசாரணை பண்டத்தரிப்பு பிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்ஸ் அத்தனாசியார் முன்னிலையில் நடைபெற்றது. காலஞ்சென்ற இளம்பெண்ணின் கணவர் சாட்சியமளிக்கையில், ஐந்து வருடங்களாகக் காதலித்துத் தாங்கள் திருமணம் செய்துகொண்டதாகவும், தமக்கு 2 வயது பிள்ளை ஒன்று இருப்பதாகவும், சம்பவதினத்தன்று தான் வேலைக்குச் சென்றுவிட்டு இரவு 8 மணியளவில் வீடு திரும்பியபோது தமது மனைவி இறந்தநிலையில்காணப்பட்டதாகவும், பக்கத்தில் கிருமிநாசினிப்போத்தல் ஒன்றும் கிடக்கக் கண்டதாகவும், தொய்வு நோயினால் தமது மனைவிஅவஸ்தைப்பட்டுவந்தாரெனவும் அதைப் பொறுக்க முடியாமல்தான் அவர் தனது உயிரை மாய்த்ததாகத் தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

காலஞ்சென்றவரினால் மரண விசாரணை அதிகாரிக்கும், பொலிசாருக்கும், தாயாருக்கும் எழுதி வைக்கப்பட்ட 3 கடிதங்கள் மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டன. சங்கானைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். மரணவிசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினார். (இ)

---

# சுழிபுரம் கிராமசபைக்கு தொலைபேசி

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராம சபை அலுவலகத்திற்குச் சென்றவியாழன் முதல் தொலைபேசித் தொடர்பு புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை 'எக்சேஞ்' மூலம் இச் சேவை நடைபெற்று வருகின்றது. மிகவும் அவசியமும் தேவையுமான காரியங்கள் உடன் நிறைவுபெற இத் தொலைபேசித் தொடர்பு வாய்ப்பாக உள்ளதாக விசேஷ ஆணையாளர் திரு. எஸ். ஞானபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கவே

# திமுக-இ.காங்கிரஸ்கூட்டணி உருவாக்கப்பட்டது

வெங்கட்ராமன் கூறுகிறார்

## "கூட்டு கலையும் என எவரும் ஐயம் கொள்ளத் தேவையில்லை"

சென்னை, பெப். 10
இந்தியாவில் சோஷலிசசமுதாயமொன்றை அமைக்கும் நோக்குடனேயே இந்திராகாங்கிரஸ்- தி. மு. க. கூட்டணி அமைக்கப்பட்டது. தேர்தலுக்காக மட்டும் இக்கூட்டணி அமைக்கப்படவில்லை.

இவ்வாறு இந்தியநிதியமைச்சர் திரு. ஆர்.வெங்கட்ராமன சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

நல்லதொரு சூழ்நிலையில்உருவாக்கப்பட்ட தி. மு. க- இந்திரா காங்கிரஸ் கூட்டணி தொடர்ந்து நீடிக்குமென்பதில் எவருமே ஐயம்கொள்ளத் தேவையில்லையென்றும் அவர் கூறினர்.

வேலை இல்லாத் திண்டாட்டத்தை நாட்டிலிருந்துவிரட்டியடிக்க தொழில்புரட்சிஒன்றை மேற்கொள்வதற்கு அரசுஉறுதி பூண்டுள்ளதென்றும் திரு. வெங்கட்ராமன் கூறினர். (இ)

## பொலிசார் அத்துமீறிய செயல்களில் ஈடுபட்டனர்

### உத்தரப் பிரதேச முதல்வர் ஒப்புக்கொள்கிறர்

புதுடில்லி, பெப். 10
"உத்தரப்பிரதேசமாநிலத்திலுள்ள நாராயண்பூர் கிராமத்தில் பொலிசார் அத்துமீறி பல செயல்களைச் செய்திருக்கிறர்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதற்காக மாநில அரசைக் கலைக்கவேண்டியஅவசியமில்லை."

இவ்வாறு உத்தரப்பிரதேச முதல்வர் திரு. பனர்ஜிதாஸ் கூறினர்.

நாராயண்பூர் கிராமத்தில் அண்மையில் அசம்பாவிதசம்பவங்கள் நடைபெற்ற இடங்களை நேரில் பார்வையிட்ட பின்னர் லக்னேவில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அக்கிராமத்தில் மானபங்கப் படுத்தப்பட்டதாக எந்த ஒரு பெண்ணும் தம்மிடம் புகார் செய்யவில்லையென்றும் அங்கு இடம்பெற்ற அத்துமீறிய செயல்கள் குறித்து உடன்விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்படுமென்றும் அவர் கூறினர்.

முதலமைச்சர் பதவியைத் தாம் ராஜினமாச் செய்யப் போவதாக வெளிவந்த செய்திகள் அர்த்தமற்றவை என்றும் அவர் கூறினர். (இ)

## ஆப்கான் யுத்தத்தில் 1 லட். 10ஆயிரம்மக்கள்பலி

### 2,500 ரஷ்ய படைவீரரும் மரணம்

லண்டன், பெப். 10
ஆப்கானிஸ்தானில் கடந்த 20 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் யுத்தத்தில் 1 லட்சத்து 10 ஆயிரம் ஆப்கானிஸ்தான் மக்கள் உயிரிழந்துள்ளனரென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2,500 சோவியத்வீரர்கள் இந்த யுத்தத்தில் பலியாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது கிழக்கு ஆப்கானிஸ்தானில் ரஷ்யப் படைகள் பீரங்கித் தாக்குதலையும் விமானத் தாக்குதலையும் மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## வட்டு 'திரு' அன்னதானம்

(பண்டத்தரிப்பு)
அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நினைவு தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் தொண்டைமானறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் வட்டுக் கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு அன்னதானம் ஒன்றை நடாத்தினர்.

## நியமனம்

(மாவிட்டபுரம்)
காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரியாக திரு. ஆர். ஜி. பீரிஸ் நியமனம் பெற்றுவந்துள்ளார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியில் தமது கண்காணிப்பின் கீழ் குற்றச் செயல்களைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார். (அ)

## விபத்து மரணம்

(பண்டத்தரிப்பு)
வடலியடைப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கோர லொறி விபத்தில் ஸ்தலத்தில் பலியான லொறிச் சாரதி தர்மராஜா (வயது 22) வின் மரணம் தொடர்பாக விசாரணை நடாத்திய பண்டத்தரிப்புப் பிரிவுத் திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்ஸ் அத்தனசியார் விபத்து மரணம் என்று தீர்ப்பு வழங்கினர். பிரேத பரிசோதனையைச் சங்கானை அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். சிவகுருநாதன் நடாத்தினர். கணபதிப்பிள்ளை, சுந்தரலிங்கம், கந்தையா, மூர்த்தி. ஆகியோர் சாட்சியமளித்தனர். சாட்சிகளைச் சங்கானைப் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் திரு. குலரத்ன ஆஜர் செய்தார்.

......

## ராஜினமா செய்திக்கு பட்வாரி மறுப்பு

சென்னை, பெப். 10
தமிழக கவர்னர் பதவியை திரு. பிரபுதாஸ் பட்வாரி ராஜினமாச் செய்யவுள்ளார் என்று வெளிவந்த செய்தியை அவரே மறுத்துள்ளார்.

"தமிழக மக்கள் என் மீது ஆழ்ந்த நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த நம்பிக்கை தொடரும் வரைக்கும் நானும் தொடர்ந்துபதவிவகிப்பேன்" என்று அவர் கூறினர். (இ)

......

## பட்டரி குழந்தையின் துணையுடன் 25 ஆயிரம் டாலர்வரை திருட்டு!

### துணிச்சல் மிக்க பெண்ணின் சாகஸம்

ரோம், பெப். 10
பட்டரியால் இயங்கும் பொம்மைக் குழந்தையின் துணையுடன் 25 ஆயிரம் டாலர் பெறுமதியான வைரத்தை இளம்பெண் ஒருவர் பட்டப்பகலில் மிகவும் சாதுரியமாகத் திருடிச் சென்றுள்ளார்.

இது பற்றிக் கூறப்படுவதாவது:

இத்தாலியில் உள்ள கடைக்கு குழந்தைகளை வைத்துத் தள்ளிக்கொண்டு செல்லும் வண்டியில் குழந்தை ஒன்றுடன் சென்ற பெண்மணி ஒருவர், 25ஆயிரம் டாலர் பெறுமதியான வைரத்தை எடுத்து விலை பேசிய பின்னர் அவ்வைரத்தைக் காரில் இருக்கும் தமது கணவருக்குக் காட்டிவிட்டு வருவதாகச் சொல்லி தமது குழந்தையைப் பார்த்துக் கொள்ளுமாறு கடைச் சிப்பந்திகளிடம் கூறிவிட்டு கடையை விட்டு வெளியேறினராம்:

சிறிதுநேரத்தில் குழந்தை அழுதபோது அதனைத்தூக்கிப்பார்த்த சிப்பந்திகளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அழுதது உண்மையான குழந்தையல்லவென்றும் பட்டரியால் இயங்கும் பொம்மையே அது என்றும் அவர்களுக்கு அப்போது தான் தெரியவந்ததாம்.(இ)

## புத்தகப் புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)
மக்கள் பிரசுராலயத்தின் புத்தக-புகைப்படக் கண்காட்சி யாழ். நகர மண்டபத்திலும் யாழ். பல்கலைக்கழகத்திலும், அடுத்த மாதம் 12 ம் திகதி தொடக்கம் 18 ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இப்புத்தகக் கண்காட்சியில் அரசியல், விஞ்ஞானம், பொருளாதாரம், இலக்கியம், தொழில் நுட்பம், சிறுவர் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் இடம் பெறும். (அ)

## கருணநிதி-தமிழக கவர்னர் சந்திப்பு

சென்னை, பெப். 10
தி. மு. க. தலைவர் திரு. மு. கருணநிதி நேற்று தமிழககவர்னர் திரு. பிரபுதாஸ் பட்வாரியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

பல முக்கிய விடயங்கள் குறித்து இவர்கள் பேச்சு நடத்தினர்கள் என்று தெரிவிக்கப்பட்டபோதிலும்விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (இ)

## பாகிஸ்தானில் 5 லட்சம் ஆப்கான் அகதிகள்!

இஸ்லாமாபாத், பெப். 10.
ஆப்கானிஸ்தான்நெருக்கடியை அடுத்து 5 லட்சம் ஆப்கான் அகதிகள் பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இத்தகவலை பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக் தெரிவித்தார். (இ)

## தொண்டமான் திறந்துவைப்பார்

(யாழ்ப்பாணம்)
கிளிநொச்சித் தொகுதியிலுள்ள தர்மபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நுண்கலை நெசவு நிலையத்தை கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. சௌ. தொண்டமான் இம்மாதம் 18-ந் திகதி திங்கட்கிழமை திறந்துவைப்பார்.

வடபிராந்திய சிறு கைத்தொழில் இலாகா உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். விசுவலிங்கத்தின் முயற்சியினல் இக்கட்டிடவேலைகள் யாவும் 2 லட்சம் ரூபா செலவில் 3 மாத காலத்தில் துரிதகதியில் பூர்த்தியாகியுள்ளன.

நுண்கலை நெசவு நிலையத்திற்கு 5 லட்சம் பெறுமதியான உபகரணங்களை வழங்க அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

படித்துவிட்டு வேலைவாய்ப்பின்றி இருக்கும் 25 பெண்பிள்ளைகளுக்கு இந்நிலையத்தில் வேலைவாய்ப்பளிக்கப்படுமெனவும் திரு. விசுவலிங்கம் தெரிவித்துள்ளார். (கொ)

# ஆப்கான்-ஈரான் எல்லையில் சோவியத்படைகள் குவிப்பு

## அமெரிக்கா, ஈரான் குற்றச்சாட்டு; ரஷ்யா மறுப்பு

வாஷிங்டன், பெப். 10
ஆப்கானிஸ்தானின் ஈரானிய எல்லையில் சோவியத் படைகள் குவிக்கப்படுகின்றன என்றும் இப்படைகளின் நடமாட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்க வெளிநாட்டமைச்சைச் சேர்ந்த அதிகாரி திரு. கொலின்ஸ் கார்ட்டரே இவ்வாறு குற்றம் சாட்டியிருந்தார்.

### ஈரான் ஊர்ஜிதம்

அமெரிக்காவின் இக்கூற்றை ஈரானிய வெளிநாட்டமைச்சும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

### ரஷ்யா மறுப்பு

ஈரான் எல்லைக்கருகே சோவியத் படைகள் குவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவையென்றும் உண்மைக்குப் புறம்பானவையென்றும் ரஷ்யா அறிவித்துள்ளது. (இ)

## ஈரான் புரட்சியின் முதல்ஆண்டு கொண்டாட்டம்

தெஹ்ரான், பெப். 10
ஈரான் புரட்சியின் முதலாவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் பங்குபற்றுவதற்காக சமயத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி 11-ம் திகதி நாளை திங்கட்கிழமை ஆஸ்பத்திரியிலிருந்து தெஹ்ரான் வருகிறர்.

புரட்சியின் முதலாண்டுக் கொண்டாட்டங்கள் தொடர்பாக நடைபெறும் விசேட அணிவகுப்பை அயத்தொல்லா நாளை பார்வையிடுவார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு ½ 30
சிவாஜி-மாலினி
பொன்சேகா
**பைலட் பிரேம்நாத்**

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஜெயசித்ரா
**உங்கள் விருப்பம்**
(புதிய பிரதி)

**வெலிங்டன்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன்-புஷ்பலதா நடித்த
**புகுந்த வீடு** (புத்தம்புதிய பிரதி)

**லிடோ** (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-30
போன்: 7693
**தெய்வ மகன்**

கடைசி வாரம்
**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் மங்கையர் கூட்டம்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
**தேவதாஸ்**
யாழ். நகரில் தேவதாஸ் திரையிடப்படும் கடைசி சந்தர்ப்பம் இதுவே. கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
ஜெய்சங்கர் - ஜெய்சித்ரா
நாகேஷ், K. A. தங்கவேலு, S. A அசோகன்
**பணக்காரப் பெண்**
(புத்தம் புதிய கொப்பி)

**REGAL** (Jaffna) Last few days
Daily at 2-00, -30, 7-00 & 9-30 P.m.
**"FROM NOON TILL THREE"** (Color)
Next: ONE FLEW OVER THE CUKOO'S NEST

**மனோஹரா A** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Daily 10-30, 4-45, 7-00 & 9-30
Mathiev Carriere
**'POLICE PYTHON 357'** (Color)
13 2-80 முதல் **மகாகவி காளிதாஸ்**

**SRIDHAR** JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 and 9-30 p.m.
That "Walking Tall" man is back!
Joe Dow Baker is back As Rugged Hero
in
**FRAMED**
(Adults only)
Coming Soon: **BADGE 373**

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
தேசிய பூங்காவில்... மரணபயம் ஏற்படும் அதிர்ச்சி!
பதினெட்டடி உயரமும் சுமார் ஆயிரம் இருத்தல் எடையும் கொண்ட "கிறிஷ்லி" என்னும் இராட்சச விலங்கு மனிதனைப் புசிக்கவிருக்கும் பயங்கரம்!
ஐயோ! இப்பொழுது யாழ். நகரிலுமா?
**"GRIZZLY"**
HORROR! TERROR!! SUSPENSE!!! Scope-Color-
- More Suitable For Adults -

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்மன்ட் கலர்)

# இன்றைய பலன்

தை மாதம் 28-ம் திகதி
திங்கட்கிழமை
(11-2-1980)

மேடம்: வாகனம் செலுத்துவோர், அதிக கவனம்செலுத்தவும். புனைந்துரைகளால் மனம் புண்படும். வீணான வார்த்தைகளை தவிர்த்துக்கொள்ளவும்.

இடபம்: இனிமையின் அழைப்புஇன்று உங்களுக்குக் கிடைக்கும். களஸ்திர வழியாலும் கண்ணியம் சேரும். தொழிலில் சிநேகித வழி மகிழ்ச்சியுமுண்டு.

மிதுனம்: விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையலாம். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும். அடக்கமே நன்று.

கடகம்: தெய்வபக்தி மேலிடும். தந்தை வழிமூலம் மகிழ்ச்சிக்கிடமுண்டு. குடும்பத்திலும் புதிய வழிகளைக் கையாளுவீர்கள். தொழில் சுகமுண்டு:

சிங்கம்: பூமியால் லாபமுண்டும். புத்திரர் புகழுமுண்டு. பொதுசனத் தலைமைக்கிடமுண்டு. பொதுவாக வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு.

கன்னி: பொதுத் துறையில் நாட்டமுண்டு. முயற்சியால் முதலிடம் கிடைக்கும். உற்சாகமளிக்கும் செய்தியும் கிடைக்கலாம். வரவேற்க வேண்டிய தினம்.

துலாம்: விந்தையான போக்கு வேடிக்கை காட்டும். சிக்கலான பிரச்னைகள் தலைதூக்கலாம், உடற்சுகக்குறைவுக்கிடமுண்டு. மௌனம் விரும்பத்தக்கது.

விருச்சிகம்: அதிகாரப் போதையில் தவறுகள் நடக்கலாம். நண்பர்கள் சகவாசத்தைத் தவிர்த்துக்கொள்ளவும். குடும்பப் பிணியும் தலைதூக்கும். புதிர் நிறைந்த தினம்.

தனுசு: சிலர் வாழ்க்கையில் தனச்சிறப்பும் இடம்பெறலாம். நலன் தரும் சம்பவங்கள் நடக்கும். நலிவு சொல்லாமல் பறக்கும். சுபதினம்.

மகரம்: அன்னியர் மத்தியில் நிதான புத்தியுடன் பழகவும். சகோதர வழியாலும் சஞ்சலத்திற்கு இடமுண்டு. கடமையிலும் கவனம் செலுத்தவும்.

கும்பம்! திறமைக்கு முதலிடம் கிடைக்கும். ஆசிரியர்கள் உற்சாகமடைவர். மேலதிகாரிகளின் பாராட்டுதலுக்கும் ஆளாவீர்கள்.

மீனம்: வியாபாரத்துறையில் லாபமேற்படலாம். நன்மை தரும் இடப்பிரிவும் ஏற்படலாம். குடும்பவழிச் சிறப்புமுண்டு.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க.வேலுப்பிள்ளை**

## சந்தேக நபர் பிணையில் விடப்பட்டார்

(மாவிட்டபுரம்)

திருடும் நோக்கத்துடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது வீட்டினுள் புகுந்து பதுங்கியிருந்ததாக மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்ட சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரான எம். துரைராஜா என்பவரது வீட்டினுள் புகுந்து பதுங்கியிருந்த பி. மகேஸ்வரன் என்பவர் பொலிஸ் உத்தியோகத்தரின் மனைவி குசினிப் பக்கம் செல்லவே அவரது கழுத்திலிருந்த 20ஆயிரம் ரூபா பெறுமதியன தாலிக்கொடியை அறுத்துச் செல்ல எத்தனித்ததாகவும் அவர் கூக்குரலிடவே சந்தேகநபர் ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பொலிசாரால் மேற்படிநபர் தேடப்படுவதையடுத்து அவர் காங்கேசன்துறை பொலிசில் சரண் புகுந்தார். மல்லாகம் நீதிமன் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்ட இச்சந்தேகநபர் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (அ)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
[illegible]
சுபதினம்

பன்னாலை

## பண்ணிசைச் செல்வர் திருநாவுக்கரசு

பன்னாலைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக்கொண்டு, தம் முயற்சியால் இசைதெளிந்து, பல்லோருமேத்தப் பண்ணிசையிற் புகழ்பெருக்கி, வாழ்ந்த திரு. கந்தையா திருநாவுக்கரசு அண்மையில்இறைவனடிசேர்ந்தார். அன்னாரது மறைவு சைவ உலகிற்குப் பேரிழப்பாகும்.

சைவநெறியைச் சிறப்புறப் பரப்பிநிற்கும் கீரிமலைச் சிவநெறிக் கழகத்தின் ஓதுவாராசப் பணிபூண்டு ஆலயங்கள்தோறும் தமது பண்ணிசையாற் பயன்பெருக்கி வாழ்ந்த திருநாவுக்கரசு, வாழ்விலே சிறந்த விவசாயியாகத் திகழ்ந்தவர்.

பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டபின் விவசாயத் தொழிலிலே ஈடுபட்டுழைத்த இவர் தமது இசை ஆர்வத்தைக் கைவிடவில்லை. அயற் கிராமமாகிய அளவெட்டியில் வாழ்கின்ற நாகசுர வித்துவான்கள் அனைவரிடத்தும் நட்புப்பூண்டு, அவர்களது இசைத்திறமையைத் தம்குரல் வளத்தால் ஏற்றுப்பாடும் வல்லமையைத் திருநாவுக்கரசு பெற்றார். நாகசுர வாத்திய இசை நுணுக்கமெல்லாம்இவர் குரலில் இருந்து அநாயாசமாக வெளிவந்தன.

இவரது பண்ணிசை வண்மையை உணர்ந்தவர்கள் தம் சபைகளிலேபன்இசைப்பதற்கு இவரைவிரும்பி அழைத்தனர். நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் வரதலம் முதலாம் தலங்களிலே உற்சவ காலங்களில் இவர் ஓதிருமுறை தி அடியார்களைப் பரவசப்படுத்தும் நிலை அவர் மறைவு நாள்வரையும் தொடர்ந்து வந்துள்ளது. புராணபடனம் நிகழும் இடங்களுக்கு இவர் விசேஷ அழைப்புப்பெற்றுச் சென்று புராணம் வாசித்துச் சபையை மகிழ்விப்பார்.

இவ்வாறு புகழ்பெருக்கி வாழ்ந்து யாராலும் பண்ணிசைச் செல்வன் என அழைக்கப்பெற்ற அமரர் திருநாவுக்கரசு யாதோர் உடற்பிணியுமின்றி அதிகாலை எழுந்து நீர்இறைக்கும் யந்திரத்தை வயலுக்குக் கொண்டுசென்று நீர்பாய்ச்சிவிட்டு வீட்டுக்கு வந்தவர் ஒரு சில நிமிட நேரத்தில் திடீர் மரணமெய்தினார்.

நாளும் இன்னிசையாற் தமிழ்பரப்பிநின்ற திருநாவுக்கரசனின் ஆன்மா சாந்தி பெறுக.

ச. விநாயகரத்தினம்
சிவநெறிக் கழகச் செயலர்

## பாலா நிதி

(மட்டுநகர்)

அமரர் பாலசுப்பிரமணியத்தின் குடும்பநிதிக்கு ஆசிரியர்கள் நிதி வாரி வழங்க வேண்டும் என்று மட்டக்களப்பு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க யோ. முத்துராஜா சகல ஆசிரியர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தேசிய தினவிழா

(மன்னார்)

"மன்னார் விளையாட்டரங்கில் தேசியதின விழா மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. மன்னார் அரசாங்க அதிபர் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். பாடசாலை மாணவ மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையையும் ஏற்றுக்கொண்டார். பாடசாலை பாண்ட் வாத்தியக் கோஷ்டியினர் தேசிய கீதம் இசைத்தனர்.

இதனைத் தொடர்ந்து பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி போன்ற போட்டி நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. தேசிய தினவிழாவில் பல அதிகாரிகளும் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர். மன்னார் மாவட்ட அரசினர் அலுவலகங்களில் தேசியக் கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டிருந்தன.

......

## வைத்தியசாலைத் தினம்

(மன்னார்)

மன்னார் அரசினர் வைத்தியசாலையில் விரைவில் வைத்தியசாலைத்தினம் கொண்டாடப்படவிருக்கிறது. அன்றைய தினம் வைத்தியசாலையில் கட்டிடங்கள் அபிவிருத்தி செய்வதோடு வைத்தியசாலைச் சுற்றுடலில் பல சிரமதானத்திட்டங்களும் நிறைவேற்றப்படவுள்ளன.

## கூட்டணியினர்...

3ம் பக்கத் தொடர்ச்சி)

### சமஷ்டிக்கு மாறானவரல்ல

அமரர் ஜி. ஜி. சமஷ்டி ஆட்சிக்கு மாறானவரல்ல. 1956-ம் ஆண்டு தேர்தல் முடிவுகள் வெளியான போது தமிழரசை வகுப்புவாதத்தால் பெறமுடியாது. தமிழினம் அப்படி ஒருமுடிவுக்கு வந்தால் அதனையும் இந்த ஜி. ஜி. ஒருவனால் மட்டும் தான் பெற்றுத்தரமுடியும் என்று பகிரங்கமாகக் கூறினார்.

வட்டமேசை மாநாட்டின் மூலம் தான் தமிழர் பிரச்னையை தீர்க்கலாம் என அவர் திரும்பத் திரும்பக் கூறினார் ஒற்றுமைப்படுவோம் என 60-ம் ஆண்டில் கேட்டார் அது நடக்கவில்லை.

தமிழ்க்காங்கிரஸ் உபதலைவர் திரு. எம். கே. சுப்பிரமணியம் பேசுகையில் அமரர் ஜி.ஜி.யின் ஆற்றலை இப்போது தான தமிழினம் உணருகிறது. என்று கூறினார்- இப்போ அவர் இருந்தால் எங்களுக்கு கஷ்டம் வந்திருக்காது என தமிழ் மக்கள் உணரத் தொடங்கியிருப்பதாகவும் கூறினார்.

அமரர் ஜி.ஜி.யை அன்று துரோகி என்று தூற்றியவர்கள் இன்று தியாகி என்று போற்றுகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

தமிழ்க்காங்கிரஸ் கொழும்பு கிளைத்தலைவர் சட்டத்தரணி எஸ். சரவணமுத்து பேசுகையில் அமரர் ஜி. ஜி. தலைமையில் தமிழ்மக்கள் சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழ்ந்தார்களென்றும் கூறினார். தமிழ் ஈழம் வேண்டுமா? தபால் கந்தோர் வேண்டுமா என்று தேர்தல் காலத்தில் கேட்ட கூட்டணியினர் இன்று அபிவிருத்தி பற்றி பேசிவருவதாக அவர் னார். அமரர் ஜி. ஜி. தமிழ் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்கையில் முட்டுக்கட்டை போட்டவர்கள் இன்று அபிவிருத்திபற்றி பேசுவதாகவும் கூறினார்.

சட்டத்தரணி ஐ. ராசரத்தினம் பேசுகையில் தமிழ் காங்கிரஸை பலப்படுத்துவது தான் அமரர் ஜி.ஜி. க்கு செய்யும் கைமாறு என்றார்.

திருவாளர்கள் ஆர். என். சிவப்பிரகாசம் ஆர். ரி. சுப்பிரமணியம், வி. சதாசிவம் டாக்டர் எ. எல். எபிரகாம் ஆசிரியர்கள் ப. ஜீவானந்தம் எம். ஏ. அன்ரன், ஆர். ஈ. ஆனந்தராசா, மற்றும் பலர் பேசினார்கள். (கொ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூ கேம்பிறிட்ஜ்
டியூடோறியல் இன்ஸ்ரிரியூட்
திருநெல்வேலி சந்தி.

ஆரம்பமாகியுள்ளது.

G.C.E. (A/L) வர்த்தகம் விஞ்ஞானம்
April & August 1981
G. C. E. (O/L). Grade 9 Dec 1980
Radio & Electronics-with Practical
Advanced & Spoken English
Short Hand & Typing
I. B. K. I. A. A.

விபரங்கட்கு: நிர்வாகி

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

## சாணத்திலிருந்து மின்சாரம்!

சென்னை, பெப். 10

மாட்டுச் சாணத்திலிருந்து நேரடியாக மின்சாரம் உற்பத்தி செய்யும் முறை ஒன்றை தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்துள்ளது.

இந்தமுறை பல்கலைக் கழகத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது என்று மேற்படி பல்கலைக்கழகப் பேராசிரியர் கே. ஆர். சுவாமிநாதன் தெரிவித்தார். (இ)

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...



டில்கா வாச் வேக்ஸ்
- பஸ் நிலைய எதிர் மேல்மாடி .
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### சட்டவிரோத சைக்கிள் சவாரி

# பொலிசார் தீவிர சட்ட நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

இன்றுமுதல் சட்டத்திற்கு விரோதமான முறையில் சைக்கிள் சவாரி செய்வோர் மீது கடும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

யாழ். நகரில் விபத்துக்கள் தற்போது அதிகரித்தமைக்கு சைக்கிள் காரர்களே காரணமாக இருப்பதாகவும் அண்மையில் பொலிசார் நடாத்திய விசாரணைகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒருவழிப்பாதைகளில் சட்ட விரோதமாகச் செல்வதாகவும், பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குபோகும்போதும் வரும்போதும் சைக்கிள்களில் பக்கம் பக்கமாகச் செல்வதாலும், வெளிச்சம் இல்லாமல் இரவில் சைக்கிள் ஓடுவதாலும் அதிவேகமாகச் சைக்கிள்களை ஓட்டுவதாலுமே கூடுதலான விபத்துக்கள் நடைபெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக பாடசாலைகளிலும் பொது இடங்களிலும், பொலிஸ் நிலையங்களிலும் பல வகுப்புகள் நடாத்தி வீதி ஒழுங்குமுறைகள் போதிக்கப்பட்டபோதும்அதைப்பொருட்படுத்தாது அதே தவறுகளை மாணவர்கள் மீண்டும் மீண்டும் செய்துவருவதாயும்பொலிசார் கவனத்தில் கொண்டுள்ளனர்.

இளைஞர்களும், நடுத்தர வயது உடையவர்களுமே சட்ட விரோதமாக சைக்கிள்களை ஓடுகிறார்கள் என்றும் இனி மேலாவது இவர்கள் சட்ட விரோதமாக சைக்கிள் சவாரி செய்வதை விடுத்து சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படியும், தவறினால் எக்காரணம் கொண்டும் இவர்களுக்கு இரக்கம் காட்டப்படமாட்டாது என்றும் உடனடியாக அவர்களுக்கெதிராக நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ். பொலிஸ்நிலைய போக்குவரத்துப் பகுதி பொறுப்பதிகாரியும் சிரேஷ்ட- இன்ஸ்கபக்டருமான திரு. என். சேனாதிராசா கூறினார்.

யாழ். பஸ். நிலையம், பெண்கள் பாடசாலை, பெண்கள் கல்வி பயிலும் தனியார் கல்வி நிறுவனங்கள், ஆகிய இடங்களிலும், சந்திகளிலும் இளைஞர்கள் கூட்டமாக நின்று போக்கு வரத்துக்கு இடையூறுகள் விளைவிப்பதாகவும், வீதியால் செல்லும் மாணவிகளை கிண்டல் செய்வதாகவும் பொலிசாருக்குப் பல புகார்கள் கிடைத்துள்ளது எனவே சந்திகளில் நின்று அரட்டை அடிக்கும் இளைஞர்களும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு இவர்கள் மீது நீதி மன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. என். சேனாதிராசா தெரிவித்தார். (கொ-இ)

## நண்பனுக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் ஒருவர் தமிழ்நாட்டுக்கு சென்றிருந்தபோது, சென்னையிலுள்ள ஒரு ஹோட்டலில் திருகோணமலையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை நடேசன் என்ற இளைஞரைச் சந்தித்தார். பின்னர் இருவருமே இலங்கையர் என்ற ரீதியில் உரிமையுடன் பழகி நெருங்கிய நண்பர்களாகிவிட்டார்கள்!

"சிலநாட்களின் பின்னர் இவர்கள் இருவரும் இலங்கை திரும்பியதும், திருகோணமலை நண்பர், குரும்பசிட்டி நண்பரின் வீட்டிலேயே நீண்டநாள் தங்கிவிட்டார். பண்புடன் பழகிய திருமலை நண்பரை எந்தச் சந்தேகமும்கொள்ளாமல் குடும்பசிட்டி நண்பரும் அவரின் குடும்பத்தவர்களும் தாராளமாக உபசரித்தனர், நாட்கள் மறைய மறைய, திருமலை நண்பர் 'உள்வீட்டு' மாப்பிள்ளையாகவிருந்தாராம். இதற்கு அடையாளமாக நிறைவான தங்கச்சங்கிலியும் மாப்பிள்ளைக்கு வழங்கப்பட்டதாம்.

"இவ்விதமாக 'உறவு' வளர்ந்தநிலையில், அந்த தூரத்துச் சொந்தம் தனது சொந்த ஊருக்குப் போய்வரத் தொடங்கியது. புகுந்தவீட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்கும் தெரிந்துகொண்ட அந்த நண்பர் திடீரென காணாமற் போய்விட்டார்! போனவர் போனவர்தானும்! அதே நேரத்தில், வைபவமொன்றுக்கு அணிவதற்கு அலுமாரியின் ஒரு மூலையில் முடங்கிக் கிடந்த நகைகளின் அவசரம், குரும்பசிட்டி வீட்டாருக்கு ஏற்பட்டது!

அறுபதினாயிரம் ரூபா பெறுமதியான நகைகளைத் தேடி, அலுத்துப்போன அவர்களுக்கு கடைசியில்தான் சூசைப்பிள்ளை நடேசன் அரங்கேற்றிய 'நாடகம்' பற்றிப் புரிந்ததாம்!

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் திருப்பதி என்பவர் செய்துகொண்ட மேற்படி முறைப்பாட்டைத் தொடர்ந்து காங்கேசன்துறை பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் திரு. பீரிஸ், தங்கையா ஆகிய இருவரும், திருட்டுப்போன நகைகள் முழுவதையும் உருக்கப்பட்டநிலையில் திருகோணமலையிலுள்ள ஒரு நகைக்கடையிலிருந்து மீட்டுள்ளதுடன், சந்தேகநபர் சூசைப்பிள்ளை நடேசன் என்பவரையும் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். திருட்டுப்போன நகைகளின் மொத்தப் பெறுமதி அறுபதினாயிரத்து நானூற்று எழுபத்தொரு ரூபா என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீடியோ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துரையாடலில் யாழ் பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா மேலும் கூறியதாவது:

### பொதுமக்கள் முறையீடு

"வீடியோ படம் காட்டுவதற்கு பொதுமக்கள் மத்தியில் குறிப்பாக முஸ்லிம் பகுதியில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாக அறிந்துகொண்டேன். இது அமைதிக்குப் பங்கம்விளைவிக்கும் என்றும் இங்கு பலர் எடுத்துக்கூறினார்கள்.

இவ் விடயத்தை அணுகும் முறையை மாற்ற தீர்மானித்துள்ளேன். பொதுமக்கள் அபிப்பிராயத்திற்கு செவிசாய்க்க தீர்மானித்துள்ளேன்.

"பொலிஸ்பகுதியினருக்கு, 'வீடியோ' படக்காட்சி நடத்துவோரை பிடிப்பது அதிமுக்கிய கடமையாகக் கருதவில்லை, எங்கள் கடமைகளில் முக்கியமானவைகுற்றச்செயல்கள் சம்பந்தப்பட்டவை. சட்ட ஒழுங்கை பராமரிப்பதற்காக இந்த விடயத்தில் கூடுதல் அக்கறை எடுக்க வேண்டும்.

### திரைப்பட கூட்டுத்தாபனம்

"நாங்கள் ஏற்கனவே இதற்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளோம். திரைப்பட கூட்டுத்தாபனத்திடமிருந்து முதலாவது புகார் கிடைத்தது. குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காட்சி நடைபெறுவதாக புகாரில் கூறப்பட்டிருந்தது. பின்னர் யாழ், தியேட்டர் உரிமையாளர்கள் இவ் விடயத்தை என் கவனத்திற்கு கொண்டுவந்தார்கள். இதில் சட்டம் சம்பந்தமான கருத்தை தெரிவித்தார்கள். சட்ட ஏற்பாடு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பதாக கூறினேன்.

### பொலிசார் சென்றபோது...,

"பொலிசார் சில இடங்களுக்கு சென்றபோது 'வீடியோ' ஏற்பாடு செய்தவர்கள் கூடுதலான பணத்தை செலவிட்டுவிட்டோம். கடைசி நேரத்தில் தடைசெய்வது சரியல்லஎன்று கூறியுள்ளனர்.

"வீடியோ காட்சி அமைப்பாளர்களுக்கு அறிவித்தல் கொடுத்தோம். அவர்களுக்கு போதிய அவகாசம் கொடுத்த பின்னர் நடவடிக்கை எடுத்தோம். அவர்கள் சட்டம் பற்றி நன்கு அறிந்திருந்தார்கள். பத்திரிகைகள் மூலமும் சட்டம்பற்றி அறிவித்திருந்தோம். ஆதலால் சட்டத்தை அறியவில்லை என்று அவர்கள் விளக்கம்தரமுடியாது .பொது மக்களும் சட்டத்தைப்பற்றி அறிந்திருக்கிறார்கள்.

### ஒலிபெருக்கி அனுமதி மறுப்பு

"பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்திருந்தேன். ஒலிபெருக்கி அனுமதி இதற்கு கொடுக்கவேண்டாமென்றும் அறிவித்திருந்தேன். சில வேறு நிகழ்ச்சிகளுக்காக ஒலிபெருக்கி அனுமதி எடுத்து இதற்குப் பயன்படுத்தியிருக்கக்கூடும். வீடியோ காட்டுவோர் மீது நடவடிக்கை எடுப்பது பொலிஸாரின் முக்கிய கடமையாக இல்லாதிருந்தபோது இது குற்றப்பிரிவு தொடர்பானதால் நடவடிக்கை எடுத்துவருகிறேன். பொலிஸ் தலைமைப்பீடத்திலிருந்தும் இதுபற்றி அறிவித்தல் வந்திருக்கிறது. திரைப்பட கூட்டுத்தாபனத்தினர், பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு இவ் விஷயத்தை கொண்டுவந்திருக்கவேண்டும்.

### ஒரு சம்பவம்

"பொலிஸ்நிலையத்திற்கு பொலிஸ்காரர் ஒருவர் வீடியோ உபகரணங்களையும் பெட்டியையும் கொண்டுவந்திருந்தார். காட்சியின்போது பறிமுதல் செய்ததாக கூறினார். அந்தநேரத்தில் பறிமுதல்செய்தது சரியில்லையெனக் கருதினேன். அந்தப் பொலிசாரும் வேறு கடமைக்கு சென்றபோதே இதனைச் செய்துள்ளார். இப்படியான நடவடிக்கையால் காட்சி தடைப்பட்டதால் பொலிசாருக்கு எதிராக மக்கள் மனம் மாறுவார்கள். மோதல் ஏற்படவும்இடமுண்டு வெண்கலக்கடையில் யானை புகுந்த மாதிரி பொலிசார் நடவடிக்கை எடுக்கமுடியாது. அது பொலிஸார் பொது மக்கள்நல்லுறவை பாதிக்கும்.

"பொலிசார் கைப்பற்றிய வீடியோ பெட்டிகள், திருப்பி உரிமையாரிடம் ஒப்படைக்கப்பட்டது. காட்சிக்கு கட்டணம் வசூலிக்கப்பட்டதாக நிரூபிக்கப்படாததினால் உதவிப் பொலிஸ்அதிபர் அவற்றை திருப்பி கொடுக்குமாறு பணித்திருந்தார். யாழ், நகரமுதல்வர் இதனை ஆட்சேபித்து 'ஏன் திருப்பி கொடுத்தார்கள். பறிமுதல் செய்திருக்க வேண்டும்' என்று என்னிடம் கூறினார். இவ்விடயத்தில் நகர முதல்வர் அக்கறை காட்டினார். (கொ)

## நல்லூர் ப. நோ. கூ. ச. விறகுகாலை இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மரவிற்பனை நிலையமொன்றை இன்றுகாலை கொக்குவில் அரசினர் மருத்துவமனைக்கு அண்மையிலுள்ள இடத்தில் சங்கத்தலைவர் திரு. அன்றூ திறந்துவைப்பார்.

இவ் வைபவத்தில் யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரன், யாழ் மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன், மரக்கூட்டுத்தாபன முகாமையாளர் திரு. தே. பொன்னம்பலம், பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். குமாரச்சந்திரன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம், மக்கள்வங்கி முகாமையாளர் திரு. அருளானந்தம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர்.

மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி,
மதுரை, பம்பாய்,
கோலாலம்பூர்,
சிங்கப்பூர், பரிஸ்,
லண்டன், துபாய்,
சவூதி அரேபியா,
கனடா
ஆகிய நாடுகளுக்கு
அழைத்துச் செல்ல

மற்றும்
பாஸ்போட்,
அமெரிக்கன்
டிறவலர்ஸ் செக்
உலகின் எப்பகுதிக்கும்
விமான டிக்கட்,
சுற்றுலாக்கள்
ஆகிய உங்கள்
தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்குசெய்துகொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்.,

தபால்பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட[illegible]ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி ம[illegible] 11-ந் திகதி அச்சி[illegible] வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the [illegible] Office Sri Lanka under No QB/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org